# மறை ஞானப்பேழை

**சத்தியம் வந்துவிட்டது !**

**அசத்தியம் அழிந்து விட்டது !**

**நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !**

January 2023 ஜனவரி 2023











Retail Selling Price 25

Volume - 14, Issue - 11

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)




சங்கைமிகு குத்புல் ஃபரீத்,
ஜமாலிய்யா அஸ்ஸையித்
யாஸீன் மௌலானா (ரலி)
அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

மறை
ஞானப் பேழை

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்


**வெளியிடுவோர்**

**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**

பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.

திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா

அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா

நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

**கலீஃபா.** A.N.M. **லியாகத் அலி,** B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி

ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,

52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**

**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**

229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,

ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் – 624 001.

CELL : 99445 76165

Website:www.emsabai.org

email: aalimpulavar07@ gmail.com

email: j.mdrahmathulla@yahoo.com


# மறை ஞானப் பேழை


**ஜமாதுல் அவ்வல்–ஜமாதுல் ஆகிர்**

**ஜனவரி 2023**

**Volume - 14 Issue - 11**


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில்.....*

*திருமறைப் பக்கம்.*

*அமுத மொழிகள்.*

*கல்வத் நாயகம் (ரலி)*

*ராத்திபின் மகிமை.*

*பெருமானார் கலப் பெண்மணிகள்.*

*ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்)*

*உமர் ரலி புராணம் நூல் வெளியீடு*

*புத்திக் கெட்டாப் புனிதர்கள்.*

*துபை மீலாது விழா – வினா விடைகள்.*

*செய்யிது ஆசியா உம்மாள்*

*சுயம் பிரகாசம்*

*இனிக்கும் இறைமொழி!*

*ஹைதராபாத் ஸுஃபி ஹள்ரத். (ரஹ்)*

*மற்றும் வழக்கமான தொடர்கள்.*

*மற்றும் பல் சுவை செய்திகள்.*

# இன்றே தொடங்குவோம்! இனிதே தொடங்குவோம்!

நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த "உமர் ரலி புராணம்" நூல் வெளியீடு சிறப்பாக நடந்து முடிந்து விட்டது.

இத்துடன் நம் பணி முடிந்துவிட்டதா என்றால், அதுதான் இல்லை. இப்போதுதான் நம் பணி தொடங்கியிருக்கிறது.

ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம். நம் ஆருயிர் செய்கு நாயகம் அவர்கள், எத்தனை ஆண்டுகள் – தங்களின் தொடர்பணிகளுக்கு மத்தியில் இந்த இலக்கியத்தை வடித்திருக்கின்றார்கள் என.

நாம் இந்த அருமையான இலக்கியத்தை– தமிழறிந்த முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார், நூலகங்கள், தமிழறிஞர்கள், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் என அனைத்துக்கும் கொண்டு சேர்க்கவேண்டும்.

நம் ஊரில் வசிக்கும் தமிழாசிரியர்களுக்கு, நமதூர் பள்ளி நூலகத்திற்கு நாமே இதனை வாங்கி அன்பளிப்பாக வழங்கலாம்.

நம் ஊரில் இருக்கும் நூல் விற்பனை நிலையங்களை அணுகி, அவர்கள் தங்கள் விற்பனை நிலையங்களில் நூலை விற்க ஏற்பாடு செய்யலாம்.

உமர் ரலி புராணத்தோடு குறிஞ்சிச்சுவை, பாலை வனம் நூலையும் சேர்த்து வழங்கலாம்.

தற்போது நூல் வெளியீடு மட்டுமே நடைபெற்றிருக்கிறது. நூல் பற்றி திறனாய்வுகள், கருத்தரங்குகள் ஆங்காங்கே ஏற்பாடு செய்தால் தான் நூலைப்பற்றி மக்கள் அறிய முடியும்.

நூலின் தனித்தன்மை பற்றியும், கம்பராமாயணம், சீறாப்புராணம், தேம்பாவணி போன்ற நூற்களோடு ஒப்பீடு செய்தும் பேசும் நாவலர்களை அழைத்துப் பேசவைத்து ரசிக்கலாம். பட்டி மன்றங்கள் நடத்தி அறிஞர்களைப் பேசச்செய்து நூலிலுள்ள நயமான விஷயங்களை வெளியுலகுக்குக் கொண்டு சேர்க்கலாம்.

முரீதுகள் மாதக் கூட்டங்களில் நூலைப் படித்து அதிலுள்ள கருத்துச் சுவையைப் பகிர்ந்து கொள்ளலாம்.

"இந்த நூற்றாண்டுக்கும் நாமே, இனிவரும் நூற்றாண்டுகளும் நம் பார்வையிலேயே நடைபெறும், இனி எம்மைப் போன்ற ஒருவர் தோன்றப் போவதில்லை" என்றுரைத்த வாப்பா நாயகம் அவர்களின் முன்னறிவிப்பு ஆன்மிகத்துக்கு மட்டுமல்ல அருந்தமிழுக்கும் சேர்த்தே என நாம் விளங்க வேண்டும்.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**
**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



ஓர் இறை நேசரைப் பார்த்து இன்னோர் இறைநேசர் பொறாமை கொண்டிருந்தால் வலியாக இருக்க முடியாது!

ஒருவரைப் பார்த்து நாம் ஏன் பொறாமைப்பட வேண்டும்? அது நமக்குத் தேவையில்லாதது!

ஒருவர் அறிவிற் சிறந்தவராக இருக்கிறார் எனில் நாமும் அவரைப் போன்று அறிஞராக வேண்டும் எனப் பொறாமைப்படலாம்.

ஒருவர் செல்வந்தராக இருக்கலாம்; அவர் போன்று உழைத்து நாமும் செல்வந்தராக வேண்டும் என எண்ணலாம்.

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

## தர்பியத் எனும் நல்லொழுக்கப் பயிற்சி.

எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் காலத்திற்குப்பின் ஞானம் குறையக் குறைய வேறு வகையான அமைப்புகள் வந்து சேர்ந்துவிட்டன. ஞானம் இருக்குமிடத்தில் வேறு ஒன்றும் இராது.

ஞானம் குறைந்ததால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையே குறைவுபடுத்திப் பேசும் காலம் வந்து விட்டது! பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை ஈஸா (அலை) அவர்களைவிடத் தரம் குறைத்துப் பேசுகின்றனர். அவர்களையும் முஸ்லிம்கள் எனத்தான் கூறுகின்றனர்.

இதற்கெல்லாம் காரணம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சரியாக நம் குழந்தைகளுக்குப் போதித்து - அவர்களின் உயர்வை - மகத்துவத்தைச் சொல்லிக் கொடுக்காமல் இருப்பதுதான். குழந்தைகளைப் பக்குவப்படுத்த வேண்டும்.

வகுப்பில் பாடங்களைக் கற்றுத் தரும் ஆசிரியர் தமக்குரிய நேரம் முடிந்தவுடன் அடுத்த வகுப்புக்குப் போய்விடுவார். ஆதலால், எப்போதும் குழந்தைகளின் அருகே இருக்கும் பெற்றோர் தாம் இவ்விஷயங்களைக் கற்பித்துக் கண்காணித்து வரவேண்டும்.

எங்கள் ஊர்ப் பகுதியில் (இலங்கை - வலிகாமம்) சின்னஞ்சிறு வயதிலேயே ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பற்றியும் அவர்களின் தாயார், தகப்பனார், பாட்டனார், இன்னார் இன்னாரென்று பாடல் வடிவத்திலேயே சொல்லிக் கொடுத்து மனனஞ் செய்யக் கற்றுத் தருவார்கள். இப்போதோ அக்காலம் மாறிவிட்டது.

இந்தக் காலமோ இஸ்லாமியச் சமுதாய மக்கள் சிந்தித்துப் பார்க்காமல் மற்றவர்களைப் பின்பற்றும் காலமாக இருக்கிறது. எனவே, “தர்பிய்யத்” செய்யப்படாத பிள்ளைகள் மதம் மாறிப்போகவும் வாய்ப்புண்டு.

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

*கொய்த மலர்*

தாஜுத் தர்ஜமா

திருமறைப் பக்கம்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

**(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)**

مَثَلُهُمْ كَمَثَلِ الَّذِى اسْتَوْقَدَ نَارًا ۚ

அவர்களுடைய உதாரணம் நெருப்பை எரிய வைத்த ஒருவனின் உதாரணம் போன்றது.

فَلَمَّآ اَضَآءَتْ مَا حَوْلَهٗ

அவனைச் சூழவுள்ளவைகளெல்லாம் (அந்நெருப்பின் வெளிச்சத்தில்) பிரகாசமானபோது [காரிருளில் பாதையறியாது தவித்து நிற்கையில் நெருப்பு எரிக்கப்பட்டு அவனைச் சூழவுள்ளவைகள் தெளிவாகத் தென்பட்டு மன நிம்மதி ஏற்பட்டபோது]

ذَهَبَ اللّٰهُ بِنُوْرِهِمْ وَتَرَكَهُمْ فِىْ ظُلُمٰتٍ لَّا يُبْصِرُوْنَ ۝ ١٧

(அவர்கள் செய்து வந்த அடாச் செயல்களினிமித்தம்) அல்லாஹ் அவர்களின் கண்களின் (கண்களிலிருந்த) ஒளியைப் போக்கி (கண்ணால்) பார்க்க முடியாத கடும் இருளில் அவர்களை விட்டு (த் தவிக்க) வைத்தான்.

صُمٌّۢ بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَرْجِعُوْنَ ۝ ١٨ (5)

(அவர்கள்) செவிடுகள், குருடுகள், ஊமைகள். அவர்கள் (முன்னிருந்தமை போல் கேட்பவர்களாகவும் பேசுகிறவர்களாகவும் பார்ப்பவர்களாகவும்) மீளவே மாட்டார்கள்.

[அவர்களுடைய நிராகரிப்பிலிருந்தும் வழிகேட்டிலிருந்தும் புலனுடையவர்களாகவும் சிந்திப்பவர்களாகவும் நல்வழிக்கு திரும்பவே மாட்டார்கள்].

اَوْ كَصَيِّبٍ مِّنَ السَّمَآءِ فِيْهِ ظُلُمٰتٌ وَّرَعْدٌ وَّبَرْقٌ ۚ

அல்லது (அவர்களுடைய உதாரணம்) காரிருள்களும் இடியும் மின்னலும் உள்ள வானத்திலுள்ள கார்முகிலை அல்லது வானத்திலிருந்து பொழியும் மழையைப் போன்றதாகும்.

يَجْعَلُوْنَ اَصَابِعَهُمْ فِيْٓ اٰذَانِهِمْ مِّنَ الصَّوَاعِقِ حَذَرَ الْمَوْتِ ؕ

(காரிருளாலும் கடுமிடியாலும் மிகு மின்னலாலும் இறந்துவிடுவோமோ என்ற அச்சத்தை அவை உண்டுபண்ணுகின்றமையால்) இடி முழக்கங்களால் சாவுக்கு அஞ்சி அவர்களுடைய காதுகளிலே அவர்களுடைய விரல்களை வைத்து (அழுத்தி) க் கொள்வார்கள்.

وَاللّٰهُ مُحِيْطٌ ۢ بِالْكٰفِرِيْنَ ۝ ١٩

அல்லாஹ் நிராகரிப்போரைத் தீர அறிந்தவன். (சூழ்ந்தறிந்தவன்)

يَكَادُ الْبَرْقُ يَخْطَفُ اَبْصَارَهُمْ ؕ

மின்னல் அவர்களின் பார்வைகளைச் சிதறவடிக்க நெருங்குகின்றது.

كُلَّمَآ اَضَآءَ لَهُمْ مَّشَوْا فِيْهِ ۙ

அவர்களுக்கு மின்னல் ஒளிகொடுக்கும் போதெல்லாம் அந்த ஒளியிலே அவர்கள் நடந்தார்கள்.

وَاِذَآ اَظْلَمَ عَلَيْهِمْ قَامُوْا ؕ

அவர்கள்பால் இருள் கவிந்தபோது நின்றனர்.

وَلَوْ شَآءَ اللّٰهُ لَذَهَبَ بِسَمْعِهِمْ وَاَبْصَارِهِمْ ؕ

அல்லாஹ் விரும்பியிருந்தால் அவர்களின் கேள்வியையும் அவர்தம் பார்வைகளையும் போக்கியிருக்கக் கூடும்.

اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ۝ ٢٠ ع 2

நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின்பாலும் மிக்க வலிமை பொருந்தியவன்.

(அல்லாமா அப்துல் ஹமீது  பாகவி அவர்களின் மொழி பெயர்ப்பு)

17. இவர்களுடைய உதாரணம், ஓர் உதாரணத்தை ஒத்திருக்கிறது.(அதாவது. அபாயகரமான காட்டில் காரிருளில் அகப்பட்டுக்கொண்டவர்களுக்கு வழியை அறிவிப்பதற்காக) ஒருவர் தீயை மூட்டி (அதனால்) அவரைச் சூழ ஒளி ஏற்பட்ட சமயத்தில் (அவர்களுடைய தீய செயலின் காரணமாக) அல்லாஹ் அவர்களுடைய (பார்வை) ஒளியைப் போக்கி பார்க்க முடியாத காரிருளில் அவர்களை விட்டுவிட்டான்.

18. (அத்துடன் இவர்கள்) செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் குருடர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் (அபாயகரமான இந்நிலையிலிருந்து) மீளவே மாட்டார்கள்.

19. அல்லது (இவர்களுடைய உதாரணம்) அடர்ந்த இருளும் இடியும் மின்னலும் கொண்ட  மேகம் பொழியும் மழையில் அகப்பட்டுக் கொண்டவர் களின் உதாரணத்தை ஒத்திருக்கிறது. இவ்வாறு அகப்பட்டுக் கொண்ட இவர்கள் இடி முழக்கங்களால்  மரணத்திற்குப் பயந்து தங்கள் விரல்களைத் தங்கள் காதுகளில் நுழைத்து (அடைத்து) க் கொள்கின்றனர். நிராகரிக்கும் இவர்களை அல்லாஹ் ( எப்பொழுதும்) சூழ்ந்திருக்கிறான்.

20. (தவிர) அந்த மின்னல் இவர்களின் பார்வையைப் பறிக்கப் பார்க்கிறது. அது இவர்களுக்கு வெளிச்சம் தரும்போதெல்லாம் அந்த வெளிச்சத்தில் நடக்க விரும்புகிறார்கள். (ஆனால் அம்மின்னல் மறைந்து) அவர்களை இருள் சூழ்ந்து கொண்டால் (வழி தெரியாது திகைத்து) நின்று விடுகிறார்கள். இன்னும் அல்லாஹ் விரும்பினால் இவர்களுடைய கேள்விப் புலனையும் பார்வையையும் போக்கிவிடுவான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் (எவ்விதம் செய்ய) பேராற்றலுடையவன் ஆவான்.

# தீன் குறள்

**நிறைபாற் குடமும் நிறைவாமோ? - வல்ல**

**இறைபால் நெருங்கா ரெனின்.**

எல்லாம் வல்ல இறைவனின் பக்கம் நெருங்காதிருந்தால் நிறைந்த பாற்குடமும் அவருக்கு மன நிறைவைத் தராது.

***தத்துவக் கவிஞர்  இ. பதுருத்தீன்.***

# திருக்குறள்

**அறம்பொருள் உயிரச்சம் நான்கின்**
**திறந்தெரிந்து தேறப் படும்.**

அறம் பொருள் இன்பம் தன் உயிருக்கு அச்சம் என்னும் நான்கினது வகையாலும் ஆராய்ந்தே ஒருவன் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும்.

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

பிறை

جمادی أول

**ஜமாதுல் அவ்வல்**

| | |
|---|---|
| 1 | சம்பைப்பட்டினம் ஜமாலிய்யா மௌலானா (ரலி) அவர்களின் கந்தூரி |
| 17 | பதிவுத்தீன் ஸிந்தா மதார் (ரலி) மறைவு |
| 22 | அஹ்மது கபீர் ரிஃபாயி (ரலி) மறைவு |
| 25 | கீழக்கரை மஹானந்த பாபா (ரலி) கந்தூரி |
| 29 | காலித் இப்னு வலீத் (ரலி) மறைவு |

جمادی ثانی

**ஜமாதுல் ஆகிர்**

| | |
|---|---|
| 5 | மௌலானா ரூமி (ரஹ்) மறைவு |
| 2 | கம்பம் அம்பா நாயகம் கந்தூரி |
| 10 | நாகூர் ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) கந்தூரி |
| 14 | இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) மறைவு |
| 17 | காயிதே மில்லத் (ரஹ்) மறைவு |
| 22 | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) மறைவு |

வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? **மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**
**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**
**IFSC Code.IOBA 0002098**
**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



## உமர் ரலி புராணத்தில் ...இறை வாழ்த்து.

தெய்வத் தன்மை யுடையவனாம். தன்னை மறைத்த பல திரைகளைக் கொண்ட தெய்வீகமானவனாம். வெற்றுக் கண்ணால் காண முடியாத உருவம் இல்லாத வனாம், உருவற்ற அழகன், அனைத்துக்கும் கருவானவன். அனைத்துக்கும் உயிரானவன். இப்படித்தான் என அளவிட முடியாதவன். அவன் தனக்கே முழுவதுமாய் (எவ்வளவுமாய்) உரிமையோடு பணிவோம்

நான் என்று இல்லாதவன். எங்கும் நிறைந்துள்ளான். முன், பின், பக்கம் (மேல், கீழ்) எனும் இடங்களில்லாதான். காலத்தோடு ஆங்கு, ஈங்கு எனும் இட நிலைகள் இல்லான். அத்தன்மைத்த இறையோனுக்கு நான் (என்) துன்பம் நீங்கப் பணிந்தேன்.

உருவற்றதாகி மென்மை அல்லது தயையே உருவாகி அருமையான மோட்சமே தனதாகி அவனன்றி வேறொன்றின்றென்னும் அரிய பரம கதியாகி நியாயப் பிரமாணமுமாகி தண்ணளியாகி பிரபஞ்ச மனைத்துமியங்க இயக்கும் எப்பொருளினதும் கருத்தாவாம் இறையைப் பணிவதே பணிவு.

ஒப்பற்ற நல்ல வழி, ஒளிபொருந்திய அழகு மிக்க (அனைத்திலும்) அடைக்கலமாகும் மிகவிரி(ந்து பர)ந்த ஒப்பற்ற ஒருவனென்று புகழ்ந்து இன்பமடைய வாழ்த்தும் பெருமை பொருந்திய அமரர் கணத்தின் வாழ்த்தே (என்றும்) வாழ்வாயாக. (இத்தகைத்த இறைத்துதியே) தூய் மையான அமரர்களின் மிக்க வணக்க மெனும் (அனைவரும்) துணிந்த தெளி பொருளாகும்.

# அமுத மொழிகள்

ஒப்பிலா வியற்கையாய் ஒழுங்கு படுத்தப்பட்ட பேரழகாய் நூல்களிலிருந்தும் கண்டுகொள்ள இயலாத அறிவாய் இறை உறைந்திருக்கும் உள்ளத்திலிருந்தே வெளிவருகின்ற எப்போதுமுள்ள நேர்மை குன்றாத அறிவாய் விளங்கும் ஞானத்தையே என்றும் போற்றுவோம். (புகழ்வோம்) ஒருவனான பெருமை பொருந்திய இறைவனை நினைத்தே எப்போதும் வாழ்வோம்.

எல்லாமாகி அங்குள்ளான் இங்குள்ளான் என வில்லாது எவ்வளவு எத்தனை என்பது அற்றுப் போய் ஒப்பில்லாதாகி பரிபூரணமாய்ப் பரவிக் கலந்து தெய்வத் தன்மை யுடையதாய் உருவற்றதாகி சீர்பெற்ற வருவுருவாகி நான் நீ என்பதில்லாதாகி புதுப்புது வடிவுகளும் அவனைச் சாராதற்றுக் காணும் பொருள்களாயும் காணாப் பொருள்களாயும் யாவுமாய் நிற்கும் தன்மையுடையதே தெய்வந்தனக்குத் தானே தானாய் நிற்கும் நிலையாகும்.

கானும் கடலும் கரையும் காற்றும் வானும் நீரும் மூச்சும் மலையும் இவ்வுகமும் சூரியனும் சந்திரனும் போன்ற இத்தன்மை யுள்ளனவாய் உள்ளனவும் நீங்கா நிறை வுற்ற அதிலிருந்து (தெய்வத்திலிருந்து) ஆனவையாம்.

அது குருடு என்னும் நிலையில் (கண்ணுக்குத் தென்படாததாய்) எல்லாமாகிப் பிரியாது (சிந்திப்பவனுக்கும்) சிந்தனைக்கும் எட்டாதாகி தெய்வத்தன்மை யுடையதாயமைந்து (யாருமின்றி எதுவுமின்றி) மந்த நிலையாய் மருண்டிருந்தது அதுவே! (இறையே!) இந்த (வெளிவந்த) நிலையில் எமக்கு உதவுகவே.

முற் கூற்றுப் போன்று அந்தகத் திதியான பூரணத்திலிருந்தே பூதங்கள் பிரியாது ஒன்றாய் வந்தன. பற்பல காரணங்களை அடக்கியதாகி அது கலைந்து ஐந்தாயிற்று. சரி நிலையினின்ற தாகி தரித்து நின்றவற்றாலே உலகமும் மற்றெல்லாப் பொருள்களும் பிரிந்து தனித்தனி யாயின.

மண்ணிலும் நீரிலும் மீண்டும் மீண்டும் (மாறி மாறி) வீசும் காற்றிலும் தீயிலும் திண்ணிய வாகாயத்திலும் ஒவ்வொருவகையிலும் மாற்றங் கொண்டு விரும்பிய வாறே பொருட்கள் அளவு கடந்து

தானாய்த் தோற்றுவித்த மேன்மையுடையவனான இறைவனுக்கே எக்காலமும் புகழ் உண்டாகுமாக.

சிறிய விதையானது உயர்ந்து பல கொப்புகளை விட்டு, விரித்து மிகப் பெரும் விருட்சமாய்த் தன் உருவை விரித்தது போல் குற்றமற்று எங்கும் கடல் போல் நிறைந்த நிர்மலனாகிய கடவுளுக்கே ஒவ்வொரு நாளும் வந்தனம். (செலுத்துவோம்.)

நயனத்திற் றென்படக் கூடியன தென்படக் கூடாதன யாவற்றிலும் அது வாகி அவையனைத்துமே தானாகி சிறுதினையின் அளவேனும் மாற்ற மில்லாதாகி கை, கால், கண், மூக்கு, முகம், வாய் போன்ற உறுப்புகள் தனக்கற்ற தாகி அனைத்தொடும் சேர்ந்து கலந்ததாகி இத்தன்மைகளை யுடையனவாய் உள்ள இறையினை வாழ்த்துவோம்.

தனியனை யடைவதில் உடை, நடை, ஊண், உறக்கம், முதலான (வாழ்வில் நாமடையும் ஆசை)களெல்லாம் தடையாகுமாமென்க. (ஆகலின் எச்)சடைவுமில்லாது (இறையை)யடைய (அதனிற்) பற்றுக் கொள்ளுங்கள்.

நாம் கற்றவைகள், நாம் பார்ப்பவைகள், மிக்க பகை, மிக்க உறவு, சொன்னவை, செய்பவை, இன்ப அநுபவங்கள் முதலான மற்றவை யெல்லாம் இறையை அணுகுதற்கு மறுப்புகளாகும். ஆகலின் உன்னை அடைதற்குப் பற்றினை ஞானமற்ற எமக்கு அருள்வாயே.

யான் உடலையுடையவன் எனும் உடலின் கன நிலையை மறந்து என் உடல் வெளியுரு அடைந்துள்ளது என்பதனை நினைந்து யான் இல்லை எனும் நிலைக்கு வந்து கடவுளுடன் இரண்டறக் கலந்து மிகவுயர்ந்த மேனிலையை அடைதல் மேன்மையாகும். இத்தகைத்த தூய்மையான நிலையை நாம் பெற்றுக் கொள்ள (அடைய) துணை யருள்வாயாக.

இறையோனே, உன் அருளை நமக்குப் பொழிவாயாக. ஏகனாகிய ஒருவனே, நமக்குக் கொடுப்பாயாக. நின்னை நாடி நற்றவஞ் செய்வோருக்கு தொடர்ந்து அருள் புரிவாயாக. தேனைவிட இன்பமான நலத்தையும் பொருட் செல்வத்தையும் தந்தருள்வாயாக. அவ்வாறே ஈந்து குற்ற மற்று வாழ்தற்கு உன் உதவியைத் தருவாயே.

# கல்வத்து நாயகம் (ரலி)

*கலீபா. M. சிராஜுத்தீன்* B.Sc., *ஹக்கிய்யுல் காதிரி. திருச்சி.*

ஒரு தடவை கல்வத்து நாயகம் அவர்களின் சீடர், தம் ஆசான் தமக்கு ஈமான், இஸ்லாம் பற்றி விளக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அவர்களைச் சந்திக்க வந்த பொழுது அவர்கள் மெஞ்ஞானத்தைப் பற்றியே மூன்று நாட்களாக வந்தவரிடம் பேசிக் கொண்டிருந்தார்களேயனறி அவர் நினைத்து வந்ததைப் பற்றி அவர்கள் பேசவேயில்லை. வந்திருந்த சீடருக்கு இது சற்று வருத்தத்தையும் வியப்பையும் அளித்தது.

மூன்றாவது நாள் அவர்கள் அந்த ச்சீடருடன் பேசிக் கொண்டிருக்கும் போது, இம்.. இன்று நீங்கள் உங்கள் ஊருக்குப் புறப்படலாம். நீங்கள் நினைத்து வந்ததைப் பற்றி நான் பேசவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம். நீங்கள் என்னிடம் கேட்க வந்ததைப் பற்றிப் பேசலாம் எனதான் எண்னேன். ஆனால் இறை நாட்டம் வேறுமாதிரி பேசவேண்டியதாயிற்று. பரவாயில்லைஈ நீங்கள் என்னிடம் வெள்ளியை நாடி வந்தீர்கள், ஆனால் அதற்கு பதிலாக தங்கத்தைப் பெற்று செல்கிறீர்கள் சந்தோஷமாக போய் வாருங்கள், என்று கூறி அனுப்பிவைத்தார்கள்.

மற்றொரு நாள் ஜமால் அஹமது அலீ ஆலிம் சாஹிப் அவர்கள் ஆண்டகையைப் பார்க்க வந்தபோது, நாம் இன்று அவர்களின் கல்வத்து அறையின் கதவைத் தட்டாமல் நின்று கொள்ள வேண்டும். அவர்களாகவே நாம் வந்ததை அறிந்து கதவைத் திறக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு ஓரமாக நின்று கொண்டார். உள்ளே இருந்த ஆண்டகை, ஓய் அஹமது அலீ, நீர் வருவதைப்பற்றி இங்குள்ள புல் பூண்டுகளெல்லாம் அஹமது அலீ வருகிறார், அஹமது அலீ வருகிறார் என்று கூறிக் கொண்டே இருக்கின்றன என்று கூறிக் கொண்டே கதவை திறந்தார்கள். இப்போது கூட அவைகளை உம்மிடம் பேச வைப்பேன். ஆனால் அவைகளின் பேச்சை உம்மால் கேட்க முடியாது என்று கூறினார்கள். ஆண்டகை அவர்கள் எப்பொழுதும் தங்கள் சீடர்களைக் கண்காணித்துக் கொண்டே வந்தார்கள். சீடர்களின் உள்ளும் புறமும் அவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிந்ததே வந்தது. ஒரு முறை

தம் சீடர் ஒருவரை நோக்கி, நீர் உங்களுடைய ஊரில் தனித்து இருந்த போது நாம் உங்களை தனித்துப் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன் ஆதலால் எப்பொழுதும் ஒழுங்குடனும் பேணுதலாக இருக்கவும் என்று கூறியனுப்பினார்கள்.

உம்மைத்தான். ஷெய்குக்கு மறைவாக இடர்கள் ஏதும் செய்துவிட முடியாது. சிலர் வெளிப்படையாகச் சொல்வார்கள். சிலர் மௌனமாக இருப்பார்கள். இன்னொரு சமயம் ஒரு ஊரில் இருந்து ஒரு நபர் ஆண்டகையைக் காணப் புறப்பட்டார். அவரிடம் இன்னொரு சீடர், என் பணிவான சலாம் ஷெய்கு அவர்களிடம் கூறி விடுங்கள் என்று சொல்லி அனுப்பினார். வந்து ஷெய்கிடம் நண்பர் சலாம் கூறிய விஷயத்தை சொன்னார். அதற்கு அவர்கள் மறைவாய் இருப்பவருக்கு ஸலாம் கூறி அனுப்புதல் சுன்னத்தா (நபியின் வழிமைறையா) அவரின் முன்னாலேயே இருப்பவருக்கு ஸலாம் கூறி அனுப்புவது சுன்னத்தா என்று அவரிடம் கேளும், என்று வந்தவரிடம் சொல்லி அனுப்பினார்கள்.

இதன்பின் ஹிஜ்ரி 1315 ஆம் ஆண்டு துல்கஃதா மாதத்தில் ஒருநாள் ஆண்டகை அவர்களின் தந்தையார் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களுக்கு உடல்நலம் திடீரென சரியில்லாமல் போனது. சிரமப்பட்டார்கள். அருகில் இருப்பவர்கள் இது இவர்களுக்கு கடைசி நேரமாக இருக்குமோ என்று கூட நினைத்துவிட்டார்கள். அவ்வளவு சிரமப்பட்டார்கள். அதுசமயம் கல்வத்து அறையைவிட்டு வெளியே வந்த ஆண்டகை தம் தந்தையைப் பார்த்து விட்டு இவர்களுக்கு இப்போது எதுவும் இல்லை. நன்கு இருக்கிறார்கள் அவர்களுக்கு தயிரும் சோறும் பிசைந்து கொடுங்கள். எல்லாம் சரியாகி விடும் என்று சொல்லி விட்டு மீண்டும் கல்வத்தின்அறைக்குள் போய் விட்டார்கள். அதுபோல் அவர்களின் தந்தையார் பூரணசுகம் பெற்று விட்டார்கள்.

ஒருநாள் ஆண்டகை அவர்களுக்கு ஒரு கனவு தென்பட்டது. அது என்னவென்றால், வானத்திலிருந்து கண்களைப் பறிக்கும் பேரொளியுடன் பொற்காப்பு ஒன்று கீழே இறங்கிவந்து ஆண்டகையவர்களின் துணைவியார் அவர்களின் வலக்காதில பொருந்திக் கொண்டது. ஆண்டகை அவர்கள் விழித்தெழுந்ததும் தம் துணைவியார் வாழ்க்கையின் முடிவு நெருங்கிவிட்டது என்பதை விளங்கிக் கொண்டார்கள். இதன்பின் சிலநாட்களே ஆயின. ஹிஜ்ரி 1316 ஆம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் 25 ஆம் நாள் ஆண்டகையவர்களின் அருமைத் துணைவியார் மவுத்ஆகிவிட்டார்கள். எனினும் ஆண்டகை கல்வத்திலிருந்து வெளியே வரவில்லை.

ஹிஜ்ரி 1316 ஆம் ஆண்டு ரஜப் மாதம் 4 ஆம் நாள் ஆண்டகையவர்களின் தந்தையார் மவுத் ஆவதற்குச் சற்று நேரத்திற்கு முன் அவர்கள் தம் கல்வத்து அறையை விட்டு விட்டு வெளியே வந்து தம் தந்தையாருடன் அரபியில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது தந்தையாரின் உயிர் பிரியவே ஆண்டகை மற்றவர்களிடம் உடனே தந்தையை நல்லடக்கம் செய்துவிடுங்கள் என்று கூறி விட்டு மீண்டும் கல்வத் அறைக்குள் போய் விட்டார்கள்.

கௌதுல் அஃலம் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் மீது ஆண்டகை அவர்களுக்குப் பெருமதிப்பு இருந்தது. அந்த ஆன்மிகச் சக்ரவர்த்தி அவர்களைப் பற்றி தமது சீடர்களிடத்தில் வெகுவாகப் புகழ்ந்து பேசினார்கள். அன்னவர்களைப் பற்றி நான் ஒரே வாக்கியத்தில் சொல்வதென்றால், குல்லு வலிய்யுன் கத்ரத்துன் மின்பஹ்ரி முஹ்யத்தீன் என்றார்கள். அதாவது வலீமார்கள் அனைவரும் முஹிய்யுத்தீன் என்ற கடலில் ஒரு துளியேயாவார்கள் என்பது பொருளாகும்.

இதன்பின் ஒரு சம்பவம் நடந்தது. அவர்களின் திருச்சமூகத்திற்கு வழக்கமாக வந்து கெண்ருந்த நபர் ஒருவர் அவர்களின் ஷெய்கு யார் என்று அவர்களிடம் கேட்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டே அவர்களின் மஜ்லிஸில் அமர்ந்தார். இதனைத் தம் உள்ளுணர்வால் உணர்ந்த ஆண்டகை, வந்த நபர் அந்த கேள்வியைக் கேட்காமலேயே, ஷைகீ ஹுவல்லாஹ் (அல்லாஹ்வே என் ஷெய்கு) என்று அவரை நோக்கிக் கூறிவிட்டார்கள்.

இதனை ஹஸன் அலிப் புலவர்,

ஷைகவரோ ஷைகுக் கென்று சிந்தையில் நினைத்தவர்பால்
ஷைகீ ஹுவல்லாஹ் வென்ற சையிதப்துல் காதிறு தான்

என்று பாடிப்பரவசமடைகிறார்.

இதன்பின் முதுகுளத்தூர் நீதி மன்றத்தில் அன்றைய அவர்களின் எதிரிகளால் வழக்கு ஒன்று நடந்து கொண்டிருந்தது. நடப்பது சிவில் வழக்கு என்றாலும் வழக்கின் உண்மைத் தன்மையைக் கண்டறியவேண்டி இருந்ததால் ஆண்டகையவர்களுக்கும் சம்மன் (அழைப்பு) வந்தது. ஒருவாறு அதற்கு இணங்கி அங்குச்செல்ல அவர்கள் வீட்டிலிருந்து கிளம்பி தைக்கா வந்து தம் தந்தையார், பாட்டனார் ஆகியவர்களின் அடக்கஸ்தலங்களை தரிசித்து விட்டு தைக்காவில் சற்று நேரம் அமர்ந்திருந்தார்கள். இச்செய்தி கீழக்கரை முழுவதும் செய்தி பரவவே அவர்களைக் காணக் கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்ததைக் கண்டு

ஊர்மக்கள் அனைவரும் மகிழ்ந்து, ஒரு பல்லக்கை ஜோடித்து எடுத்து வந்து ஆண்டகை யவர்களை அதில் ஏற்றிக் கொண்டு இருபது மைல்தொலைவில் உள்ள முதுகுளத்தூர் வரை சுமந்து சென்றனர். வழியில் மாயாகுளம், சிக்கல் முதலிய ஊர்களிலிருந்தும் மக்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள் அவரவர் ஊர்களில் பந்தல் தோரணங்களைக் கட்டி பல்லக்கு மீது மலர்களைத் தூவி பரவசமடைந்தார்கள். பல்லக்கு திரையிட்டு இருந்ததால் ஆண்டகை பல்லக்கை விட்டு கீழே இறங்கி அங்கே கூடியிருந்த மக்களுக்கு தரிசனம் தந்தார்கள்.

ஹிஜ்ரி 1329 ஆம் ஆண்டு ரபீஉல் ஆகிர் ஞாயிற்றுக்கிழமை கீழக்கரையிலிருந்து புறப்பட்ட ஆண்டகை அவர்கள் அன்று பகல் முழுவதும் பிரயாணம் செய்து இரவு தங்களுடைய கிராமமாகிய கார்த்தாகுளம் வந்து அங்கு தங்கி ஓய்வு கொண்டார்கள். மறுநாள் காலை முதுகுளத்தூர் பள்ளி வாசலில் வந்து இறங்கினார்கள். முதுகுளத்தூரே விழாக் கோலம் பூண்டிருந்தது. ஆண்டகையவர் களை தரிசிப்பதற்கு மக்கள் வெள்ளம் முதுகுளத்தூர் வீதிகளில் அலைமோதியது. அந்த மக்கள் வெள்ளத்தில் ஆண்டகை அவர்களின் பல்லக்கு மிதந்து சென்றது. திங்கட்கிழமை முழுவதும் முதுகுளத்தூரில் இருந்தார்கள். கோர்ட்டுக்கும் சென்று வந்தார்கள். அங்கு ஆண்டகை விசாரணைக் கூண்டில் நிற்பதை கண்டு மக்கள் கதறிக் கண்ணீர் வடித்தனர். நீதிபதி கேட்ட கேள்விக்கு பதில் கூறி விட்டு வெளியே வந்து விட்டார்கள். திங்கட்கிழமை முழுவதும் ஆண்டகையவர்கள் முதுகுளத்தூரிலேயே தங்கி இருந்தார்கள். அன்று முழுவதும் அவர்களைக் காண்பதற்காக ஜாதி, மத பேதமின்றி மக்கள் கூட்டம் வந்து கொண்டே இருந்தது. வந்தவர்களில் இரு இளைஞர்களும் இருந்தார்கள். அவர்களை ஆண்டகை பார்த்துக் கேட்டார்கள் நீங்கள் இருவரும் மு ருகையாவுடைய பிள்ளைகளா? என்று அதற்கு அவர்கள் ஆம் என்று பதில் கூறினார்கள். அவ்விருவரும் எங்கள் தகப்பனார் பெயர் தங்களுக்கு எப்படி தெரியும் என்று திருப்பிக் கேட்டார்கள் நீங்கள் உங்கள் தகப்பனாரிடம் கேட்டுப் பாருங்கள் நெல் அளக்கும்போது முதுகில் அடி விழுந்ததா என்று என்றார்கள்.

அதுபோல் அவர்கள் தகப்பனாரிடம் கேட்க ஆம் உண்மைதான் அவர்களின் தகப்பனார் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் நெல் வியாபாரம் செய்த போது சுந்தரபுரத்திலிருந்து நெல் வாங்க வந்த ஒருவர் நெல் அளந்து கெட்டும் போது ஒரு மூட்டை மரக்கா நெல்லைக் கூடப் போட்டுக் கட்டிவிட்டார். அப்போது அவர் முதுகில் அடிவிழுந்து கத்தினார். ஆனால் அருகில் யாருமே இல்லை ஒரு சின்னக் குழந்தையைத் தவிர இப்போது விளங்குகிறது அந்த சிறு குழந்தை ஆண்டகைதான் என்று என்று பதில் கூறினார் . (வலாறு வளரும்)

# ராத்திபு ஓதி ராஹத் பெறுவோம்.

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ் ...)

ஆத்ம சகோதரர் ஒருவர் அமீரகத்திற்கு புதிதாக வந்துள்ளார். கடந்த மாத இறுதியில் அமீரகத்தில் வேலைக்குச் சேர்ந்துள்ளார். 25 வயதுக்குள் இருப்பார். அவர்களுடைய குடும்பமே ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் முரீதீன்கள் தாம். கடந்த (08/11/2022 செவ்வாய்க்கிழமை ) நடந்த புனித ராத்திபு மஜ்லிஸ் நிகழ்விற்கு வந்திருந்தார். ராத்திபு நடந்த இடத்திற்கும் அவர் வேலை செய்யும் இடத்திற்கும் தூரம் அதிகம். கஷ்டப்பட்டுதான் வர முடியும். அவரின் வருகைக்கு மிகவும் சந்தோஷம் என்று அவரிடம் கூறப்பட்டது. ஆமாம். மேனேஜரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். ராத்திபு அல்லவா என்று கூறினார். சந்தோஷம். ஆருயிர் செய்கு நாயகம் உயிர்ப்பாக இருக்கச் சொன்ன ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்து தவறவிடாமல் வந்து விட்டீர்களே. உங்களின் வாழ்வு சிறப்பாக இருக்கும் என்றும் அவரிடம் கூறப்பட்டது. அவர் சந்தோஷம் அடைந்தார். இது போன்று மற்றொரு சம்பவமும் உண்டு.

அதற்கு முன்,

ராத்திபு மஜ்லிஸ் மற்றும் மாதாந்திரக் கூட்டத்தை ஆருயிர் செய்கு நாயகம் ஏன் கட்டாயப்படுத்தினார்கள்? நம்வாழ்வு எல்லா வகையிலும் சீரும் சிறப்புமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். நாயகத்துடைய சொல்லை யார் உயிர்ப்பித்தார்களோ அந்த நபருடைய வாழ்வும் உயிர்ப்பாகத்தான் இருக்கும்.

ஹக்கின் பரிபூரணத் தோன்றலாக இருக்கும் நமது ஆருயிர் செய்கு நாயகத்தின் கட்டளைகளை சிரமேற்கொள்ளும் பொழுது பிரபஞ்சமே அவருக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. அந்த நபர் சுற்றி இருக்கும் இடத்தில் எல்லா வஸ்துகளும் அவருக்கு உதவி செய்வதாய் ஆகிவிடும். இதுதான் உண்மை.

சில நபர்கள் தொடர்ச்சியாக பல மாதங்களாக சபையின் எந்த நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதில்லை. காரணம் டூட்டி அல்லது தொழில் என்று கூறுவார்கள். நாயகத்தின் அறிவுறுத்தலின் படி குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது கலந்து கொள்வது நம்முடைய வாழ்வை உயர்த்தும். எவ்வளவு

பெரிய டூட்டியாக இருந்தாலும் நம்முடைய மேனேஜரிடம் அனுமதி வாங்கியாவது கலந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அது வாழ்வை உயர்த்தோ, உயர்த்தோ என உயர்த்திவிடும். மேலே சொன்னது போல் மற்றொரு சம்பவம் என்னவென்றால், மற்றோர் ஆத்ம சகோதரர், வேலைக்காக இண்டர்வியூவை அட்டண்ட் பண்ணும் போதே மாதத்தில் எனக்கு இரு நாட்கள் தலா ஒன்றரை மணி நேரம் அனுமதி வேண்டும், அதற்கு பதிலாக மற்று தினங்களில் கூடுதலாக வேலை செய்து அந்த நேரங்களை சரி செய்து கொள்கிறேன் என்று கூறினார். அதற்கு நேர்முகத்தைத் தேர்வு செய்தவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். அது அவருக்கு பல விதங்களில் நன்மை அளித்துக் கொண்டுள்ளது என்று கூறுவார்.

யார் நாயகத்துடைய கட்டளைகளை தலை மேல் சுமந்து தங்களது அன்றாட வாழ்வினை அவர்கள் சொல்வது போல் ஆக்கிக் கொள்கிறார்களோ, அவர்களுடைய வாழ்வு உயரும் என்பதில் சந்தேகமில்லை. ஷைத்தான் அவரை விட்டும், அவனுடைய சுல்தானாகவே ஆகிவிடுவார் என்பதை சொல்லவா வேண்டும்?

– அப்துல் கலீல், அமீரகம்–

---

*கொஞ்சம் சிரிங்க...*

டாக்டருக்கும் ஆக்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

இரண்டு பேரும் தியேட்டருக்கு வரவழைச்சுத்தான் கொல்லுவாங்க.

சிவகாசிக்கும் நெய்வேலிக்கும் என்ன வித்தியாசம்?

சிவகாசியில் காச கரியாக்குவாங்க...நெய்வேலியில் கரிய காசாக்குவாங்க...

ஃபலுக்கும் பைலுக்கும் என் வித்தியாசம்?

ஃபைல் ல உட்கார்ந்து பைல்(ஸ்) லுக்கு பார்த்து உட்காரணும்.

செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம் ?

மனிதனுக்கு கால் இல்லன்னா பேலன்ஸ் பண்ண முடியாது...

செல் போன்ல பேலன்ஸ் இல்லன்னா கால் பண்ண முடியாது.

ஒவ்வொரு இளைஞனின் மன உளைச்சலுக்கும் காரணம்?

மதிப்பெண்ணும் மதிக்காத பெண்ணும்.

வசதி இல்லாதவன் ஆடு மேய்க்கிறான்...வசதி உள்ளவன் நாய் மேய்க்கிறான்.

ஆண்களை அதிக தூரம் நடக்கவைக்கும் விஷயங்கள் ரெண்டு?

ஒன்று பிகர், மற்றொன்னு சுகர்.

# அருள் மொழிகள்.

**மிஃராஜ்,**

வலிமார்களுடைய நிலை எந்த நாளுமே மிஃராஜ், ஹக்கோடு சம்மந்தப்படுவதெல்லாம் வலிமார்களுக்கு மிஃராஜ். முஃமின்களுக்குத் தொழுகைதான் மிஃராஜ் ஆகும்.

மிஃராஜின் போது இறைவனுக்கும் இரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் நிகழ்ந்த உரையாடலாகிய அத்தஹிய்யாத் (தின் பொருளைக் கவனித்தால்) அல்லாஹ் – இரசூல் எதிரேயிருந்து பேச்சுகளைப் பரிமாறிக் கொள்வது போல தெரிகிறது. ஆனால் இரண்டுமே ஒன்றாயிருப்பதுதான்.

**தானே தன்னில் தானானான் விளக்கம்?**

முன்னர் அனைத்துப் பொருளுமாய் இருந்தாய். அதிலிருந்தே நாமும் உருவம் பெற்றோம். இதனாலே வேறுபட்டோம். ஆயினும் நாமும் அனைத்துப் பொருளும் அதனிலிருந்தே வெளியானோம். (உ.ம்) களியை எடுத்து அக்களியாலே குடம் வனையப்படுகிறது. களியின் உருவம் மாற்றம் பெறுகிறது. இப்போது அது களியென்னும் பெயரிலிருந்து குடம் என்றும் பெயர் பெற்றது. ஆதலால், குடம் களியென்றும் நாமத்தைக் கூற முடியாதுள்ளது. நீ யார்? என்றால் அதுநான் குடம் என்கிறது. களி என்பதில்லை. அதை உடைத்து களியில் கலந்துவிட்டால் குடம் என்னும் பெயர் மறைந்து களியென்னும் தனது முன்னையைப் பெயர் வெளியாகி விடுகிறது. இவ்வாறே தான் தானே தன்னில் தானாவதாகும்.

**மனச்சாந்தி பெற வழி என்ன?**

எந்தச் செயல்கள் ஏற்பட்டாலும் எல்லாம் ஹக்கே செய்கிறது. நடக்கிறது நடக்கும், நடக்க வேண்டியது நடந்து விட்டது எனும் முடிவுக்கு வந்து சாந்தியடைய வேண்டும். இதுவே இதற்கு வழியாகும்.

**பாபவிமோச்சனம் பெற வழி என்ன ?**

மனிதனாகப் பிறந்த எவனும் குற்றத்துக்கு உரித்தானவனே. உணர்ந்தபின் அதைத் தொடர்ந்தும் செய்யாதிருப்பது மனிதபண்பு. ஆதலால் குற்றங் குறைகளை நாம் அறிந்து உண்மைப் பிரகாரம் நாம் நடந்து கொள்வது ஹக்கின் பொருத்தத்திற்கு இடமாகும். அதே பிழைபொறுப்பும் மன்னிப்புமாகும்.

***–சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்.–***

# பெருமானார் காலப் பெண்மணிகள்

## ஞானிகளான பெண்மணிகள்

(வலிமார்களாக) ஆவதற்குப் பால் தடையாய் இருக்கவில்லை. இருபாலாரிலும் அதற்குரிய இறைவனின் அருள் வழிகாட்டலில் சரியான அனுஷ்டானங்களில் ஈடுபட்டவர்கள் ஈடேற்றம் பெற்றுள்ளனர். ஆத்ம ஞானத்தின் இறுதி லட்சியம் இறைவனை அடைவது தான். சாதகன் இம்மையையும், அதன் கவர்ச்சிகளையும் வெறுத்தொதுக்கித் தன் கீழான மனத்தின் இச்சைகளை அடக்கி, அதை வசப்படுத்த வேண்டும். தான் இறைவன் மீது கொண்ட பேரின்பக் காதல் நெருப்பால் தகிக்கப்பட்டவனாக ஆக வேண்டும். எனவே, தன் லட்சியத்தை நோக்கி முன்னேறுவதற்கான அனுஷ்டானங்களில் அவன் இறங்குகிறான். அவற்றின் மூலம் அவன் பரவச நிலையையும், தன்னை மறந்த பேரின்பத்தையும் அடைய முடிகிறது. கடைசியில் தெய்வாதீனமும், தெய்வ தரிசனமுமே அவனுக்குச் சித்தியாகின்றன. இறைவனுக்கும் அடியானுக்கும் இடையில் ஏற்படக்கூடிய இத்தகைய உறவுமுறை குறித்துச் சிந்தித்தால் இவ்வித சாயுஜ்ஜிய நியையை அடைய யாரும் ஆணாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்பது விளங்கும். ஆத்மீக வாழ்க்கைக்கு ஆண், பெண் என்ற வித்தியாசம் தேவையில்லாததாகிறது. அல்லாஹ் உங்கள் வெளியுருவை நோக்கவில்லை என்றே நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அருளியுள்ளார்கள். நீதித்தீர்ப்பு நாளில், ஹே மனிதர்களே என்ற அழைப்புக் குரல் எழுந்ததும், சொர்க்கம் புகுவதற்காக எழும் முதல் கூட்டத்து மனிதர்களுள் ஹஜ்ரத் மரியம் (அலை) அவர்களும் ஒருவராகவே இருப்பார்கள்.

பெரியார் பரீதுத்தீன் அத்தார் அவர்கள் தமது தத்கிரத்துல் ஔலியா என்ற அரிய நூலில் எழுதுவதைக் கவனியுங்கள் – நமது மெய் விசுவாசத்தில் மூன்றில் இரண்டு பங்கை ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டது சரியாயின், அவர்களுடைய பாலினரான பெண் ஞானிகளிடமிருந்து நன்மையை அடைவதும் அனுமதிக்கக் கூடியதானன்றோ.

இதனால் தான், மெய்ஞ் ஞானிகளாய் விளங்கிய மாது சிரோன்மணிகள் பலர் தமது காலத்திலும், பின்னரும் மதித்துக் கொண்டாடப்பட்டுள்ளனர். யாவராலும் போற்றப்பட்டுள்ளனர். இத்தகையவர்களில் சிலருடைய வாழ்க்கை வரலாற்றை இங்கு பார்க்கலாம்.

## உம்மு ஹறாம்

இஸ்லாத்தின் ஆரம்ப கால ஞானியருள் குறிப்பிடத்தக்கவர் உம்மு ஹறாம் ஆவார். இவர் நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு பழகும் வாய்ப்புப் பெற்ற ஒரு ஸஹாபிப் பெண்மணியுமாவார். நபி பெருமானார் இவருடைய கணவரான உபாதா பின் சாமித் என்பவருடன் இவர் வீட்டுக்குச் செல்வதுண்டு. ஒரு தடவை அப்படிச் சென்றவர்கள் பகலில் அங்கே சிறிது நேரம் படுத்து நித்திரை போய் விட்டார்கள். அவர்கள் துயிலெழுகையில் சிரித்துக் கொண்டே எழுந்தார்கள். அது கண்ட உம்மு ஹறாம் அவர்கள்அவ்விதம் சிரித்துக் கொண்டு எழக் காரணம் என்னவென்று வினவினார். அப்போது பலர் புனிதப் போரிலீடுபடுவதற்காகக் கடல் மீது கப்பல்களில் அமர்ந்து பிரயாணஞ் செய்வதற்காகத் தாங்கள் கனவு கண்டதாகக் கூறினார்கள். அந்தக் கூட்டத்தில் தானும் சேர்ந்து செல்ல நபி பெருமான் பிரார்த்திக்க வேண்டுமென்று அந்த அம்மையார் கேட்டுக் கொண்டார். மும்முறை அவர் இவ்விதங் கேட்கவே, அப்படியே ஆகும், முதல்வர்களில் நீங்களும் ஒருவராய் இருப்பீர் என்று நபி பெருமானார் ஆசீர்வதித்தார்கள்.

பின்னர், ஹிஜ்ரி 27 – ல் ஹள்ரத் உதுமான் (ரலி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஸஹாபிகள் பலர் முஆவியா என்பவருடைய தலைமையில் கடல் கடந்து சென்று புனிதப் போர் நடத்த அவர்களிடம் அனுமதி கேட்டுப் பெற்றனர். இந்தக் கூட்டத்தாரிடையே உபாதா இருந்தமையால் அவர் தமது மனைவியான உம்மு ஹறாமையும் தம்மோடு அழைத்துக் கொண்டு மதீனாவை விட்டுக்கிளம்பினார். தமாஸ்கஸ் நகரம் சென்று, அங்கிருந்து ஜெருஸேலம் போய், ரம்லா என்ற ஊர் வழியாக ஸீரியாவிலுள்ள திரிப்போலி சென்றடைந்தனர். அங்கிருந்து கடல் மார்க்கமாக ஸைப்ரஸுக்குப் பிரயாணமாயினர்.

அவர்கள் ஸைப்ரஸில் இறங்கிய போது, உம்மு ஹறாம் தமது கணவரோடு செல்வதற்காக கோவேறு கழுதையொன்றின் மீது ஏறி அமர்ந்து கொண்டார். அப்போது ஜெனேவாக்காரர்கள் சிலர் அவர்களை வழி மறித்தனர். இரு கூட்டத்தாருக்கும் சண்டை மூண்டது. இச்சமயத்தில் உம்மு ஹறாம் ஏறியிருந்த கோவேறு கழுதை மிரண்டு துள்ளவே அவர் கீழே விழுந்து, அவருடைய கழுத்து முறிந்து அந்த இடத்திலேயே மரணமாகிவிட்டார்.

அங்கேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார். அவருடைய அடக்கஸ்தலம் புனித மாது சிரோமணியின் கபுர் என்று அழைக்கப்படுகிறது. புனிதப் போரில் ஈடுபட்ட நிலையில் மரணித்த அவர் வீர மரணமடைந்தவர் (ஷஹீது) ஆகவே



வாட்ஸ்அப் வரவு

அவருடைய அடக்கஸ்தலத்தின் தலைமாட்டில் ஒன்றும், கால்மாட்டில்ஒன்றும், அவற்றின் மேலே ஒன்றுமாக மூன்று மிகபெரிய கல் தூண்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றிச் சொல்லப்படும் கதை வருமாறு.

உம்மு ஹறாம் சைப்ரஸுக்கு வரும்போது, ஜெருஸலத்துக்கும் ரம்லாவுக்குமிடையில் கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவரைச் சந்தக்க நேர்ந்தது. உம்மு ஹறாமும் அவரது கணவரும் அந்த மனிதருடைய விருந்தினராகத் தங்கியிருந்தனர். அவரிடம் மிகப்பெரிய மூன்று கல் தூண்கள் இருக்கக் கண்ட உம்மு ஹறாம் அவற்றை அவர் விலைக்குக் கொடுப்பாரா என்று வினவினார். அவரோ அவற்றுக்கு விலை கொடுத்து வாங்கினாலும், அவற்றைத் தூக்கிச் செல்வது அசாத்தியம் என்று கூறி, தேவையானால் அவற்றைத் தமது அன்பளிப்பாகவே ஏற்றுக் கொள்ளலாம என்று தெரிவித்துவிட்டார். அந்தப் பெரிய கல்தூண்களை இலவசமாகப் பெற்று உம்மு ஹறாம் அவற்றைப் பாதிரியாரிடம் அடைக்கலப் பொருளாக ஒப்புக் கொடுத்துவிட்டு தமது பிரயாணத்தைத் தொடர்ந்தார். கடைசியில் ஸைப்ரஸில் அவர் மரணமுற்று அடக்கப்பட்ட சமயம அந்த மூன்று கற்களும் தமது இடம் விட்டுப் பெயர்ந்து, கடலுக்கு மேலாகப் பறந்து வந்து அவருடைய தலைமாட்டில் ஒன்றும், கால்மாட்டில் ஒன்றும், அவற்றின் மீது ஒன்றுமாக நின்று கொண்டனவாம். (இந்தக் கதைக்குச் சரித்திர ஆதாரம் ஏதுமில்லை) இவரே முதல் முஸ்லிம் பெண் ஞானி எனக் கருதப்படுகிறார்.

## ஒளித்துளிகள்.

பிறர் புகழவேண்டும் என்பதற்காக ஒருவர் ஒரு செயலைச் செய்தால் மறுமை நாளில் அவரை அல்லாஹ் கேவலப்படுத்துவான். பிறருக்குக் காட்டுவதற்காக ஒருவர் ஒருவர் ஒரு செயலைச் செய்தால் மறுமை நாளில் அவருடைய ரகசியங்களை அல்லாஹ் வேளிப்படுத்துவான்.

*அறிவிப்பவர்-அப்துல்லாஹ் இப்னு சுஃப்யான் (ரலி) நூல் – புகாரீ ஷரீப்.6499)*

சிந்தனை செய்வது ஒரு கண்ணாடி அது உன்னுடைய நல்லதையும் உனக்குக் காட்டும். உன்னுடைய தீயதையும் காட்டும்.

*(நூல் – இஹ்யாவு உலூமித்தீன்)*

கியாமத் நாளின் சிரமங்களிலிருந்து அல்லாஹ் தன்னைக் காப்பாற்றவேண்டும் என விரும்புகிறாரோ, அவர், வறுமையில் வாடும் கடன்பட்டவர்களுக்கு தவணை கொடுக்கவும். அல்லது தனக்குச் சேர வேண்டியவை அனைத்தையும் அல்லது அதில் ஒரு கதிதியை மன்னித்துவிடவும் என நாயகம் அவர்கள் அருளினார்கள்.

(நூல்– முஸ்லிம்)

# ஷாஹ் வலிய்யுல்லாஹ் திஹ்லவி (ரஹ்)

மாபெரும் ஆன்மிக மேதை ஷா வலிய்யுல்லாஹ் அவர்கள் தம்முடைய தந்தையார் நிறுவிய ரஹீமிய்யா மதஸாவில் அமர்ந்து மாணவர்களுக்குப் பாடம் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது ஒருவர் தம் மகனை அழைத்துக் கொண்டு வந்து அவனுக்கு மார்க்கக் கல்வி போதிக்குமாறு வேண்டிக் கொள்கிறார். அவ்விதமே அவர்கள் அவனுக்கு மார்க்கக் கல்வி போதிக்கத் தொடங்கி மார்க்கத்தின் மூலாதாரமான கலிமா தையிபாவை லா இலாஹ என்பதனை நீளமாக இழுத்து இல்லல்லாஹ் என்பதனைச் சுருக்கமாகக் கூறி அவனுக்குச் செல்லிக் கொடுக்கிறார்கள். அப்பொழுது அந்த இளவல் இததுதான் எனக்குச் சிறு வயதிலிருந்தே தெரியுமே என்பதைக் கூறாமல் கூறும் முறையில் ஏளனப் புன்னகை பூத்தான்.

அது கண்ட ஷா வலிய்யுல்லாஹ் அவர்கள் மீண்டும் லா இலாஹ (வணங்குதற்குரியோன் எவனுமில்லை) என்பதனை நீளமாக இழுத்துக் கூறினர். அடுத்த கணம் அவர்கள் மறைந்து விட்டனர். மறு கணம் இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர) என்று கூறிய வண்ணம் அவ்விடத்தில் பொத்தென்று வந்து குதித்தார்கள். அப்பொழுதுதான் கலிமா தையிபாவின் மகத்துவமும் ஷா வலிய்யுல்லாஹ் அவர்களின் மாண்பும் அந்த இளவல் உட்பட அங்கிருந்த அனைவருக்கும் தெரிய வந்தது. தாங்கள் சாதாரண மார்க்க அறிஞர் என்று எண்ணிக் கொண்டிருந்த தங்களின் ஆசான் மாபெரும் மேதையும் கூட என்பதனை அப்பொழுது தான் அவர்களின் மாணவர்களும் அறியலாயினர். இதன் பின் அவர்களின் மதிப்பு மக்களிடையே பன்மடங்கு அதிகமாயிற்று.

கலீபா உமர் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய ஷைகு ஷம்சுத்தீன் முஃப்தி என்பவரே இந்தியாவுக்கு வந்த, ஷா வலிய்யுல்லாஹ் அவர்களின் மூத்த மூதாதையராவார். அவர் இந்தியாவிலுள்ள ருஹ்தாக் என்ற ஊரில் குடியேறி வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் சீரும் சிறப்புடனும் இருந்த அவ்வூர் பிற்காலத்தில் அழிந்து விட்டது. இதன் காரணமாக அவரின் வழித்தோன்றல்கள் உத்திரப் பிரதேசத்தில் உள்ள புல்த் என்ற சிற்றூரில் குடியேறி வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் புல்த் என்ற சிற்றூர் இஸ்லாமியக் கலாபீடமாக விளங்கி வந்தது. அங்கு நல்லறிஞர் பலர் வாழ்ந்து வந்தார்கள்.

ஷைகு ஷம்சுத்தீன் முஃப்தியின் வழியில் தோன்றிய ஷைகு வஜீஹுத்தீன் சிறந்த சூஃபியாக விளங்கினார்கள். ஒருநாள் அவர்கள் பள்ளியில் தொழுகையில் சஜதா வில் ஆனபோது மார்க்கத்தில் உயிர் நீத்தோர்களின் பேரணியைக் கண்டனர். அவர்கள் தன்னுணர்வு பெற்றெழுந்த போது தாமும் அத்தகு பதவியை எய்தப் பெற வேண்டுமென்று எண்ணி இஸ்லாமியப் படையில் சேர்ந்து போர் செய்து வீர மரணம் எய்தினர். அவர்களின் மகன் ஷைகு அப்துர் ரஹீம் என்பவர்களும் அவ்வூர் மக்களே பெருமையடையக் கூடிய மாண்பார்ந்த அறிஞராகவும் மகானாகவும் விளங்கினார்கள்.

ஓரிரவு அவர்கள் முஹம்மது ஹாதி ஹர்வீயின் சொற்பொழிவைக் கேட்டுவிட்டுப் பெரும் மகிழ்ச்சியுடன் தம் இருப்பிடத்திற்குத் தனியாகத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது ஷைகு ஸஅதி (ரஹ்) அவர்கள் எழுதிய பின்வரும் கருத்தமைந்த கண்ணிகளைப் பாடிக் கொண்டு வந்தார்கள்.

அல்லாஹ்வை நினைவு கூர்வதைத் தவிர்த்து வேறு எதனைச் செய்த போதினும் அது வாணாளை வீணாக்குவதேயன்றி வேறில்லை. இறைவனின் இரகசியங்களைத் தவிர்த்து வேறு எதனை நீ படித்த போதிலும் அது பொய்மையேயாகும். ஸஅதியே. அல்லாஹ்வின் முத்திரையைத் தவிர்த்துள்ள வேறு எந்த அடையாளத்தையும் நீ அகற்றுவாயாக

இதன் பின்னுள்ள கடைசி அடியைக் கூற அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்த போதிலும் அது அவர்களின் நினைவுக்கு வரவில்லை. அப்பொழுது அவர்களின் வலப்புறத்தில் ஒரு மனிதர் திடீரெனத் தோற்றமளித்துப் பின்வருமாறு அந்த அடியை எடுத்துக் கொடுத்தார். உண்மையின் பக்கம் அழைத்துச் செல்லாத அறிவு, அறியாமையேயாகும் என்பதே அது.

அப்பொழுது அவர்கள் அம்மனிதருக்குத் தம் நன்றியைத் தெரிவித்து அவருக்கு இரண்டு வெற்றிலைகளை அன்பளிப்பாக வழங்கினர். அப்பொழுது அம்மனிதர் புன்முறுவல் பூத்த வண்ணம், நான் அந்த அடியை நினைவுபடுத்தியதற்கு நீர் தரும் கூலியா? என்று வினவினார். இல்லை நன்றிக் காணிக்கை என்று பதிலுரைத்தார்கள் அவர்கள்.

அப்பொழுது அந்த மனிதர் தாம் வெற்றிலை போடுவதில்லை என்று கூறி அவற்றை எடுத்துக் கொள்ள மறுத்தார். வெற்றிலை போடுவது பொதுவாக மார்க்கத்தில் விலக்கப்பட்டதா? அல்லது மகான்களுக்கு மட்டும் அது விலக்கப் பட்டுள்ளதா? கூறுங்கள். நானும் அதனை விட்டொழிக்கிறேன் என்றுகூறினர்.

அதற்கு அவர் அப்படியெல்லாம் இல்லை. நான் அதனைப் போடுவதில்லை. அவ்வளவுதான் என்று கூறினார்.

இதன் பின் தம் விரைவில் திரும்பிச் செல்ல வேண்டும் என்று கூறிய அவர் ஒரு நொடியில் அந்த நீண்ட தெருவைக் கடந்து விட்டார். அப்பொழுது அவர் ஒரு மகானாகத்தான் இருக்க ேண்டுமென்று எண்ணிய அவர்கள், தயவுசெய்து தங்களின் பெயரைக் கூறிவிட்டுச் செல்லுங்கள். நான் தங்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுகிறேன் என்று கூறினார்கள். அதற்கு அவர் ஸஅதி என்று ஒரே சொல்லில் பதிலளித்துவிட்டு மறைத்துவிட்டார். அது கேட்டு அவர்களின் உடல் சிலிர்த்தது.

அவர்கள் இதே போன்று ஷைகு நஸீருத்தீன் சிராஃஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களையும் கண்டுள்ளனர். ஒரு தடவை சிராஃஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களை உளூச் செய்து தொழப் போகக் கண்டு இங்கு உங்களுக்கு தொழுவது கடமையல்லவே என்று கூறினர். அதற்கு அவர்கள், ஆம் கடமையில்லை தன். எனினும் நான் உயிர் வாழும் தொழுது தொழுகை எனக்கு இன்பம் அளித்தது. அதே இன்பத்தை நான் இப்பொழுதும் நுகர விரும்புகிறேன் என்று கூறிவிட்டு தொழச் சென்றனர்.

அவர்கள் தொழுது முடித்த பின் அவர்களைச் சூழ ஆன்மாக்கள் வந்து குழுமின. அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சிராஃஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் ஷைகு அப்துர் ரஹீம் அவர்களிடம் கூற, முதலில் அவர்கள் தயங்கினர். பிறகு சிராஜ் தெஹ்லவீ அவர்கள், இது சாதாரணக் கூட்டமன்று, இதில் நீரும் கலந்து கொள்ளும் என்று கூற அவ்வாறே அவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அப்பொழுது ஆங்கிருந்தோர் அனைவரும் இறைபோதையில் >[ Mçé\ÅÍmJ µþÝ]çá©Ãç>¶kìï^ ïõ ¦Vïï^. *(தொடரும்)*

---

*நன்றியுள்ள மாந்தர்களே*
*தென்றல்நபி நாயகரை*
*என்றென்றும் புகழ்ந்திடுவீர்*
*நன்றியதும் புரிந்திடுவீர்*

பர்ஸன்ஜிய் மவ்லிதில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்.

இருபத்தோறாம் நூற்றாண்டின் இணையற்ற காப்பியம்...

**திருநபிகள் திருப்பேரர் சங்கைக்குரிய செய்கு நாயகம்**

**ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களின்**

# உமர் ரலி புராணம் நூல் வெளியீட்டு விழா!

2023 ஆம் ஆண்டின் 5 ஆம் நாள்.

இலக்கியப் பிரவாகமெடுத்த வியாழக்கிழமை... மாலை 4.40 மணி!

சென்னை எழும்பூர் ரமதா ஹோட்டல், பெருநாள் ஆரவாரத்தோடு வரவேற்றது.

வரவேற்புப் பதாகைகள், நூலாசிரியரின் அரிய படைப்புகளின் தகவல் பதாகைகள், விழா ஏற்பாட்டாளர்களின் கனிவான உபசரிப்புகளோடு சிறப்பு விருந்தினர்கள், தமிழன்பர்கள், ஆத்தும சகோதரர்கள் அரங்கை நிறைக்கத் தொடங்கினார்கள்.

நேர்த்தியான, எழில்நிறைந்த அதே நேரத்தில் எளிமையில் ஏற்றம் நிறைந்ததாகச் சிங்கார மேடை அமைக்கப்பட்டிருந்தது. பார்வையாளர்களுக்கான பகுதி, நேரடி ஒளிபரப்பிற்கான பகுதி, அவ்னிய்யா பதிப்பகத்தின் நூற்கள் விற்பனைக்கான பகுதி என நேர்த்தியாகத் திட்டமிட்ட ஏற்பாடுகள் தெளிவாகச் செய்யப்பட்டிருந்தன. தேநீர் ஏற்பாட்டுக்கான அறிவிப்போடு, ஒலி பெருக்கி உள்ளிட்ட ஒலி அமைப்புகள் சரிபார்க்கப்பட்டன! சுவையான தேநீர்... அதன்பிறகு, விழாவுக்கான அழைப்பு.... கணீர்! சுத்தமான ஒலி அமைப்பு!

சரியாக 4.50 மணிக்கு, விழாவுக்குத் தலைமையேற்க, **கலைமாமணி. முனைவர்.பெருங்கவிக்கோ. வா.மு.சேதுராமன் M.A., Ph.D., அவர்கள்** அரங்கம் வர, விழா தொடங்குவதற்கான முத்தாய்ப்புகள் மும்முரமாயின.

4.55 மணிக்கு, சிங்கார மேடையை அலங்கரிக்கப்போகும் விழாத் தலைவர், சிறப்புரையாற்றும் சீமான்கள், சிறப்பு விருந்தினர்கள் என ஒவ்வொருவராக மேடைக்கு **ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் கலீபா. ஆலிம் புலவர் அவர்களால்** வரவேற்கப்பட்டார்கள்.

முன்வரிசையில் கண்ணியத்திற்குரிய கலீபாப் பெருந்தகைள் வீற்றுச் சிறப்பிக்க, அரங்கம் நிறைந்த தமிழன்பர்களும், ஆத்தும சகோதரர்களும் அகமகிழ பெருவிழா இனிதே தொடங்கியது. நிகழ்ச்சி நெறியாளராக, சென்னை புதுக்கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.S.**முரளி அரூபன்** அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

**என்ன விழா....?!**

பிரபஞ்சத்தின் அருட்கொடை பெருமானார் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குலக்கொழுந்து – 34 ஆம் தலைமுறைத் திருப்பேரர் **– ஆருயிர் ஷைகு நாயகம் இமாம் குதுபுஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூது ஜமாலிய்யா அஸ்ஸையிது கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள்**

இந்த ஜமானுக்கு அருளிய மற்றுமொரு தமிழ்க்கொடை எழுந்துள்ள **உமர் ரலி புராணம்** எனும் காப்பிய நூலின் பிரமாண்ட வெளியீட்டு விழா!

**உமர் ரலி புராணம்...?**

சீர்மிகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருள்வரலாறைப் பாடிய உமறுப்புலவரின் சீறாப்புரணத்தின் மரபில், இஸ்லாத்தின் இரண்டாம் கலீபா உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் எழுச்சிமிகு வரலாற்றைச் சுவைதமிழில் சொல்லவந்த சொக்கக் காப்பியம்!

**நூல் வெளியீட்டு விழா!**

இருபத்தோறாம் நூற்றாண்டில், இதுபோலொரு காப்பியத்தை எழுதிட எவருமில்லை எனத் தமிழ்கூறும் நல்லுலகம் ஒப்புக்கொண்ட இலக்கியச் சுரங்கம்...! சென்னையில் மறுநாள் ஜனவரி 6ஆம் தேதி தொடங்கிய 46ஆம் புத்தகக் கண்காட்சிக்குக் கிரீடம் சூடியதைப் போல், உமர் ரலி புராணத்தின் வெளியீட்டு விழா அமைந்து விட்டது, இன்னும் சிறப்பு!

அழைப்பிதழில் அறிவித்திருந்தபடி, சரியாக மாலை 5 மணிக்கு, **மௌலவி. ஹாஃபிழ்.** V.M.**முஹம்மது ஜகரிய்யா ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய்யுல் யாஸீனிய்** அவர்களின் காந்தக் குரலில் இறைமறை ஓதலோடு விழா தொடங்கியது. நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், உமர் ரலி புராணத்தில் தங்களது தாய்த்தமிழை உயர்த்தி ஓதிய "**வண்டூது வானறையோ**" எனத்தொடங்கும் வாழ்த்துப்பாவை, சென்னை **திரு. மார்ட்டின்** அவர்கள் புல்லாங்குழலில் புகுந்து வரும் மெல்லிசை போல் சிறப்பாய்ப் பாடினார்.

தமிழ்வாழ்த்து செவிகளில் நிறைந்து வழியும் நேரத்தில், அரங்கமும் தமிழ் நேசர்களால் நிறைந்து மகிழ்ந்தது. **கவிஞர்.கிளியனூர் இஸ்மத்** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், தமிழால் இணைந்து அரங்கில் உறைந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

''நிறைவாகப் பேச வேண்டிய நான், விரைவாகச் செல்ல வேண்டியிருப்பதால், முன்னேயே பேச வந்தேன்'' எனத் தமக்கே உரிய மொழியடுக்கோடு உரை தொடங்கிய வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், கவிமாமணி. பேராசிரியர். **முனைவர். தி.மு. அப்துல் காதர்** அவர்கள், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், தாய் சேயைக் கொஞ்சுவதுபோல் பேரன்போடு தமிழைக் கொஞ்சும் விதத்தைச் சுட்டிப் பேசினார். உமர் ரலி புராணத்தின் செய்யுள் செழுமையைப் பேசிய அவர், பேச்சு வராத, வாய் திக்கும் குழந்தைகளுக்கு உமர் ரலி புராணத்தை வாசிக்கக் கொடுத்தால் அவர்களின் குரல் வளம் பெற்றும் எட்டும் எட்டுத்திக்கும் எனக் கூறியதோடு, அரை மணி நேரத்தில் ஆய்வுரை அளிக்க முடியாத அருங்காப்பியம் இது என்றும், இப்போது அரியர் வைத்துத் தான் செல்கின்றேன் என்றும் சுவைபடப் பேசினார்.

''இது மரபுக் கவிதைக்கு மகுடம் சூடும் நாள்; செய்யுளுக்குச் சிம்மாசனம் தரும் நாள்;

யாப்பு மீண்டும் அதிகாரத்திற்கு வரும் யாப்பதிகாரத் திருநாள்" என உமர் ரலி புராணத்தின் அறிமுக உரையைத் தொடுத்த, மறைஞானப் பேழையின் ஆசிரியரும், ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான **கலீபா. ஆலிம் புலவர். ஹுஸைன் முஹம்மது மன்பஈ அவர்கள்**, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் இதுவரையிலான தமிழ்த்தொண்டைப் பற்றியும், அவர்களின் மூலம் இன்ஷா அல்லாஹ் இனிவர இருக்கும் அரிய நூல்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்து, எவ்வாறு சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் **"அருந்தமிழ் அருட்கொடை அவ்ன் நாயகர்"** ஆகத் திகழ்கிறார்கள் என்று பேசினார்.

அறிமுக உரை நிறைவடைந்ததும், மஃரிபுத் தொழுகைக்குரிய பாங்கு உரைக்கப்பட்டது. தொழுகைக்காக ஓர் அறை ஒதுக்கப்பட்டிருக்க, இஸ்லாமிய அன்பர்கள் அங்கே தங்கள் கடமையை நிறைவேற்றி வந்தார்கள். சிறு இடைவேளைக்குப் பின்னர், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் **"நானே பலவாய், பலவே நானாய்"** எனும் மெய்ஞ்ஞானப் பாடலை மதுக்கூர் கலீபா.M.**முஹம்மது முஸ்தபா** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் கீதம் இசைத்ததோடு விழா மீண்டும் களைகட்டியது.

பெருவிழாவுக்குத் தலைமையேற்றுச் சிறப்பித்த கலைமாமணி. முனைவர். **பெருங்கவிக்கோ. வா.மு.சேதுராமன்** M.A., Ph.D., அவர்கள், தமது தலைமையுரையில் தமது ஆன்மிகத் தொடர்புகள் பற்றிக் குறிப்பிட்டதோடு, மறைஞானப்பேழை இதழின் சிறப்பை விவரித்தார். நான் எனது வாழ்வில் பல்வேறு ஆன்மிகத் தலைவர்களின் தொடர்பில் இருந்திருக்கின்றேன். ஆனால், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் தொண்டர்களைப் போல் (சீடர்களைப் போல்), எந்த ஆன்மிகத் தலைவரின் தொண்டர்களைக் கண்டதில்லை. அதுவே குருவின் சிறப்பு எனப் போற்றினார். ஜெயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியிலே போர்க்காட்சியை எப்படிப் பாடினாரோ, அதைப் போன்று சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், இலக்கிய மரபு மாறாமல், யாப்பிலக்கணம் பிறழாமல் நுட்பமான முறையில் சிறந்த முறையில் உமர் ரலி புராணத்தை இயற்றி ஜெயங்கொண்டார் எனப் போற்றிப் பேசினார்.

**"ஆமை நிறைந்த நாடு, அன்பிலா வன்ம நாடே"** என உமர் ரலி புராணத்தில் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் அரேபிய நாட்டின் இஸ்லாத்திற்கு முந்தைய நிலையைக் குறிப்பிடும் யாப்பைக் குறித்து தமது சிறப்புரையில் குறிப்பிட்ட சுன்னத் வல் ஜமாஅத் பேரியக்கத் தலைவர் அபுல் பயான். அபுத்தலாயில். அல்ஹாஜ். அல்ஹாஃபிழ். மௌலவி. Dr.M. **ஷேகு அப்துல்லாஹ் ஜமாலி** ஹள்ரத் அவர்கள், தமக்குரிய ஆய்வுப் பார்வையில் உமர் ரலி புராணத்தில் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அருந்தமிழ் ஆளுமையை அழகாக விவரித்தார்.

வழக்கமான நகைச்சுவைச் சொல்லாடலோடு தமது சொற்பொழிவைத் தொடங்கிய தமிழ்நாடு அரசு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் உயர்திரு. **திண்டுக்கல் ஐ. லியோனி** அவர்கள், ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையுடன் தமக்குண்டான தொடர்பைச் சொல்லிப் பெருமிதம் கொண்டார். உமர் ரலி புராணம் நூல் வெளியீட்டு

விழாவுக்கு அமைச்சர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் தேதி பெற்று, விழா ஏற்பாடான விவரத்தைப் பகிர்ந்து கொண்டார். சிறப்பான உமர் ரலி புராணத்தை தமிழ்கூறும் நல்லுலகிற்கு தாம் சார்ந்த பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத்தின் வாயிலாகப் பரவச் செய்து சிறப்பிக்கத் தம்மாலான முயற்சிகளைச் செய்வதாக உறுதியளித்தார். **தமிழ்நாட்டின் பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டத்தில் எப்படி சீறாப்புராணத்திலிருந்து பாடல்கள் மாணவர்கள் பயில இடம்பெற்றுள்ளதோ அதே போன்று உமர் ரலி புராணத்திலிருந்தும் பாடல்கள் பாடத்திட்டத்தில் இடம்பெற ஆவன செய்யுமாறு உயர்திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அய்யா அவர்களிடம், ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.**

**அடுத்ததாக, விழாவின் நாயக நிகழ்வு!...**

இருபத்தோறாம் நூற்றாண்டின் இணையில்லாக் காப்பியம், திருநபிகள் திருப்பேரர் சங்கைக்குரிய ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்கள் இயற்றிய **உமர் ரலி புராணம் (காப்பியம் – முதல் பாகம்)** நூல் வெளியீட்டு நிகழ்வு! மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட, மதிப்பிற்குரிய பேராசியர் பெற்றுக் கொள்வதாகத் தான் விழா திட்டமிடப்பட்டிருந்தது!

உயர்வு மிகுந்த நூலின் முதல் பிரதியை வெளியிடும் கரமாக இருப்பதை விட, பெற்றுக் கொள்ளும் கரமாக இருப்பதே தமக்குச் சிறப்பு என நினைத்த **தமிழ்நாடு அரசின் சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறையின் மாண்புமிகு அமைச்சர். செஞ்சி. K. மஸ்தான்** அவர்கள், தாமே அதை மேடையில் அறிவித்து, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல் மில்லத். பேராசிரியர் **K.M. காதர் முகைதீன்** M.A., Ex.M.P., அவர்களை நூலை வெளியிடச் செய்து, தாம் பெற்றுக் கொண்டார். ***அனைவரும் சிலாகித்து, ரசித்த சுவையான நிகழ்வாக, நூல் வெளியீட்டு தருணங்கள் அமையப்பெற்றன.***

தொடர்ந்து, **ஜனாப். கே.எம். முஹம்மது அபூபக்கர் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநிலபொதுச்செயலாளர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்) டாக்டர். எம். ஏ. தாவூது பாட்சா (தாவூது பாட்சா அறக்கட்டளை – நிறுவனர்– தலைவர், சென்னை) ஜனாப். முஹிப்புல் உலமா. ஏ. முஹம்மது மஃரூப் பி.ஏ. (துபை.) ஜனாப். ஏ. அலாவுத்தீன் ஐ.ஏ.எஸ். சென்னை. திரு. வீர பாண்டியன் எம்.ஏ. எல். எல்.பி. (சன்.டி.வி. புகழ் ஊடகவியலாளர்). நாகூர் ரூமி ஏ.எஸ். முஹம்மது ரஃபி அவர்கள். (இஸ்லாமிய ஸூபி எழுத்தாளர்.) திருமிகு. இராமமெய்யப்பன். (பத்திரிகையாளர், பதிப்பாளர், நூல் குடில் பதிப்பகம், சென்னை.) திருமிகு. கே.எஸ். புகழேந்தி (சிக்ஸ்த் சென்ஸ் பப்ளிகேசன்ஸ், சென்னை.) திருமிகு. வேடியப்பன் (நிர்வாக இயக்குனர், டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை.) திருமிகு. ஆர்ஜே. நாகா (மேலாண்மைஇயக்குனர் நான் மீடியா– கீழை நியூஸ் குழுமம்) திருமிகு. சொ. கருப்பசாமி,(தமிழறிஞர்) கலீபா. அட்வகேட். ஏ.அப்துர் ரவூப்**

**பி.ஏ.பி.எல். ( நோட்டரி பப்ளிக் – உயர்நீதி மன்ற வழக்கறிஞர், சென்னை) கலீபா. பொறியாளர். எம். சக்கரை முஹம்மது பி.இ. (பார்மர் சீனியர் ஆபீஸர். டி.ஏ.இ.கல்பாக்கம், சென்னை.) ஜனாப். டாக்டர். எஸ்.ஏ. அஷ்ரப் அலி .எம்.டி.டி.எம். (சென்னை) தத்துவக் கவிஞர். இ. பத்ருத்தீன்(சென்னை) ஜனாப். பொறியாளர்.எம்.ஹைதர் நிஜாம் .பி.இ) (பிரசிடென்ட், ஜோஹோ மிடில்ஈஸ்ட் அண்ட் ஆப்ரிக்கா), ஜனாப். எஸ்.ஐ. தவ்லத் ( செயலாளர், அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை), முனைவர். கவிஞர். எம். ஜலாலுத்தீன் (அமைப்பாளர் நிலாவட்டம், சென்னை),** ஆகியோர் நூலின் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்கள். விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்குப் பொன்னாடையும் நினைவுப் பரிசும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

அடுத்த சிறப்பாக, தீந்தமிழ்த் தொண்டை தீர்க்கமாய் ஆற்றிவருகின்ற தீந்தமிழர்.கலைமாமணி. முனைவர். **பெருங்கவிக்கோ. வா.மு. சேதுராமன் M.A., Ph.D.,** அய்யா அவர்களுக்கு, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் **"அருந்தமிழ் அருட்கொடை அவ்ன் நாயகர்"** என்னும் உயரிய விருதும் பொற்கிழியும் வழங்கி கவுரவிக்கப்பட்டது. விருதை, இஸ்லாமிய இலக்கியக் கழகத் தலைவர் பேராசிரியர். முனைவர். **சே.மு.மு. முகமதலி** அவர்களும், பொற்கிழியை இஸ்லாமிய இலக்கியக் கழகப் பொருளாளர். ஜனாப். S.S. **ஷாஜஹான்** அவர்களும் மேடையில் நிறைந்த ஆன்றோர்கள் புடைசூழ வழங்கினர். விருதையும் பொற்கிழியையும் பெற்றுக் கொண்ட பெருமகனார் பெருங்கவிக்கோ அவர்கள், அவை நிறைந்த ஆன்றோர்களையும் ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்க நிர்வாகிகளையும் ஆரத்தழுவி தமது மகிழ்ச்சியையும் நன்றியையும் பகிர்ந்து கொண்டார். **"சிறப்புமிகு விருதைப் பெறுவது பெருமை என்றும், அதிலும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 34ஆம் திருப்பேரரான சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் வாயிலாகப் பெறுவது, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்தே பெறுவதைப் போல் பேருவகையும் பெரும்பாக்கியமும் பெற்றேன்"** என்றும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார். அருள்நிறைந்த அவ்விழாவின் பொருட்டால், பெருங்கவிக்கோ அவர்களின் **"நோபல் பரிசு கனவு"** விரைவில் நனவாகப் பிரார்த்தனை செய்வதாக ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலீபா ஆலிம் புலவர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே நிறைந்த அத்தனைபேரின் பிரார்த்தனையும் அதுவாகத் தானிருந்தது.

வாழ்த்துரை வழங்கிய தமிழ்நாடு அரசின் சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறையின் **மாண்புமிகு அமைச்சர். செஞ்சி. K. மஸ்தான் அவர்கள்,** இருபத்தோறாம் நூற்றாண்டின் இணையற்ற இஸ்லாமியத் தமிழ்க் காப்பியமாக, சங்கைக்குரிய ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களின் கைவண்ணத்தில் உமர் ரலி புராணம் மலர்ந்திருக்கின்றது என்று பெருமையோடு எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் உயர்திரு.

**சா. பீட்டர்அல்போன்ஸ்** Ex.M.P., அவர்கள், கலீபா உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வாழ்வின் நிகழ்வுகளை எடுத்துக்கூறி, அவற்றை சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் உமர் ரலி புராணத்தில் இயம்பிய பாங்கை அழகாக விவரித்தார்.

ஜனவரி 5ஆம் தேதி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல் மில்லத். பேராசிரியர் **K.M.காதர் முகைதீன்** M.A., Ex.M.P., அவர்களின் 84ஆம் பிறந்தநாளாகையால், விழாவில் அன்னாருக்குப் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டு, நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பேராசிரியர் அவர்களும் உமர் ரலி புராணத்தை தமிழ்நாடு அரசு பள்ளி / கல்லூரி பாடத்திட்டத்தில் இணைக்க முயற்சிக்குமாறு, உயர்திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்ததுடன், தமிழ் இலக்கியங்களின் பட்டியலில் உமர் ரலி புராணத்தை இயற்றி இணைத்த சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைப் போற்றி, வாழ்த்திப் பேசினார். பன்னாட்டு தமிழ் உறவு மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் பெருங்கவிக்கோ அவர்கள், பேராசிரியர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

விழாவில், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் ஆக்கங்கள் அடங்கிய தொகுப்பு, சிறப்பு விருந்தினர்களுக்கு, கண்கவர் பூத்தையல் போட்ட பையில் வைத்து வழங்கப்பட்டது. திண்டுக்கல் மூத்த ஆத்தும சகோதரர் **ஜனாப். S. காஜா நஜ்முத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் தொகுத்தளித்த **உமர் ரலி புராணம் நூல் வெளியீட்டு விழா சிறப்பு மலர்** வெளியிடப்பட்டு, அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நிறைவாக, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் இணைச் செயலாளர் அதிரை **S. ஷர்புத்தீன்** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் அழைப்பை ஏற்று, விழாவுக்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினர்கள், தமிழ் ஆர்வலர்கள், அன்பர்கள், தமிழகத்தின் பல்வேறு கிளை சபைகளிலிருந்து வந்திருந்த கண்ணியத்திற்குரிய கலீபாக்கள், ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை நிர்வாகிகள், ஆத்தும சகோதரர்கள், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி பேராசிரியர்கள், யாஸீனிய் மௌலவிமார்கள் உள்ளிட்ட உலமாப் பெருமக்கள் மற்றும் விழாவின் ஏற்பாட்டைச் சிறப்பாகச் செய்திருந்த விழாக்குழுவினர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

அழைப்பிதழில் அறிவிக்கப்பட்டவாறு, சரியாக இரவு 9 மணிக்கு விழா, சங்கைமிகு ஸலவாத்தோடு நிறைவு பெற்றது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் உயர்தரமான இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செவிக்குணவு பெற்ற சீர் தமிழன்பர்கள், வயிற்றுக்கும் சுவையாய்ப் பெற்ற மகிழ்வில், உமர் ரலி புராணம் காப்பியச் சிறப்பின் உணர்வுகளோடு, தத்தம் இல்லம் நோக்கிப் பயணமானார்கள்.

(முதல் பாகத்தில் காண்டம் 1, படலங்கள் 21, பாடல்கள் 682 இடம் பெற்றுள்ளன. நூல்வேண்டுவோர் 9944576165 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொள்ளலாம்)

**தொகுப்பு :** அ. நைனார் முஹம்மது அன்சாரி M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி

# சாலைப்பராமரிப்பு! –ஆலிம்புலவர்–

ஹதீஸ் பக்கம் الحديث

**அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.**

*இறைவிசுவாசம் (ஈமான்) எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகள் உடையது. அதில் உயர்ந்தது லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என (நம்பி ஏற்று) க் கூறுவது. அதில் தாழ்ந்தது பாதையின் இடறுகளை நீக்குவதாகும்.*

இஸ்லாம் ஓர் ஆச்சரியமான சமயம். இறை நம்பிக்கையில் ஒருபுறம் கடவுளோடு சம்பந்தப்பட்ட நம்பிக்கையைக் கூறுகிறது. மறுபுறம் மனிதர்களோடு சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை வலியுறுத்துகிறது.

பாதையில் கிடக்கும் கல் – முள் – மற்றும் இடைஞ்சல் தருவதை அகற்றுவதற்கும் இறை நம்பிக்கைக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?

ஆனால் இஸ்லாம் சம்பந்தப்படுத்துகிறது,

அதாவது, இறைவனை நம்பிக்கை கொண்டு அவனை வணங்கி வழிபட, காடுமேடுகளில் சென்று ஒதுங்கி வாழ்வதைவிட மனிதர்களின் துன்பத்தை நீக்குவதும் இறைநம்பிக்கையின் ஒரு கிளை என தொடர்புபடுத்துகிறது!

இந்த ஹதீஸில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய வாசகம் "பாதையில் இருக்கும் நோவினைகளை அப்புறப்படுத்துவது" என்பதாகும்!

இந்த வாசகம் குறுகிய ஒரு பொருளைக் கொண்டதல்ல. விரிவான கருத்துகள் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

அதாவது, மனிதனின் பிரயாணத்திற்கு எவையெல்லாம் தடையாக இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் நீக்கி டின் சுகமான பிரயாணம் அமையும்தானே!

"அஸ்ஸஃபரு கித்அதும் மினன்னார்" பிரயாணம் ஒரு "நெருப்பின் ஒரு கங்கு" என்பதும் அண்ணலாரின் அறிவு மொழிதான்.

அதாவது சுடும் நெருப்பின் அங்கமான பிரயாணம் மனிதனுக்கு சுட்டெரிக்கும் நெருப்பு போல் துன்பம் தருவது! என்னதான் சொகுசாக மனிதன் பிரயாணப்பட்டாலும் வீடு வந்து சேர்ந்ததும் ஒரு நிம்மதி பிறக்கிறதல்லவா?

இந்த ஹதீஸின் கருத்துப்படி பிரயாணப்படுவோருக்கு வழிகாட்டுவது, தங்கி இளைப்பாறிச் செல்ல நிழற்குடைகள் அமைப்பது, நீர் – உணவுக்கு ஏற்பாடு செய்வது, சாலைகளை குண்டு குழியின்றி பராமரிப்பது, திருடர்களின் வழிப்பறியிலிருந்து காப்பது போன்ற அனைத்து செயல்களும் "செயல்கள் " என்ற பெயரில் சுருங்கி விடாமல் "அமல்கள்" என்ற பெயரில் விரிவடைந்திருப்பதை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# நிக்காஹ் திருமண நன்றி அறிவிப்பு

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்.....)

எங்கும் நிறைந்த பரிபூரண ஹக்கின் திருவருளாலும், கண்மணி நாயகம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், எங்கள் சற்குரு நாயகம் **குத்புஸ்ஸமான், ஷம்ஷுல் வுஜூது, ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் நல்லாசியாலும், நிகழும் ஹிஜ்ரி 1444 – ஆம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் பிறை 8 க்கு **(01.01.2023)** **ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில்**

வழுத்தூர் சேக்பரித் மர்ஹூ ப.ஜ. அப்துல் ரஹீம்– **J.** ஃபரிதா பேகம் அய்யம் பேட்டை மாமா ராவுத்தர் மர்ஹூம் **A.** முஹம்மது ஜக்கரியா **BSc., (Retd.RBI, Chennai) R.** ரஜியா சுல்தானா இவர்களின் பேத்தியும், சேக்பரீது ப.ஜ.அப்துல் ஜமீல் ஹக்கிய்யுல் காதிரிய் **Z.** ஷாஹின் ஆஜ்ரா **M. A.** இவர்களின் செல்வப் புதல்வி தீன்குலச்செல்வி

**A. ஷஃப்ரீன் ஃபரிதா** **B.E, (Senior Systems Engineer. Infosys,** (மணாளிக்கும்)

தஞ்சை. மர்ஹூம் ஹாஜி **T.A.** அப்துல் வஹாப் – ஹாஜியா ஜெய்தூன் பீவி, வழுத்தூர் வெள்ளம்ஜி மர்ஹூம் **M.A.** முஹம்மது கனி– ஹாஜியா சல்மாகனி, இவர்களின் பேரனும், ஹாஜி. **A.**நஜ்முதீன் **BSc.,** ஹாஜியா **M.** குர்ஷீத் பேகம் இவர்களின் செல்வப் புதல்வன் தீன்குலச் செல்வன்

**N. முஹம்மது அரஃபாத்** **M.Eng, Mech.,ADAS Operation Team Walmart Inc (US). Canada** **மணாளருக்கும்**

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் இம்மணவிழா **தஞ்சாவூர், விக்டர் மஹாலில் (மேரிஸ் கார்னர் அருகில்)** நடைபெற்றதில் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி துஆ செய்து உடன் நடைபெற்ற விருந்து உபசரிப்பிலும் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கு நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

அவ்வண்ணமே அழைத்த,

**ஹாஜி. A. நஜிமுதீன் BSc., ஹாஜியா M. குர்ஷீத் பேகம்**
**Er. T. நதீம் B.Tech.(VP, Citi Bank, Canada)**
**Er. N. சமீஹா B.Tech**
46. சீவக சிந்தாமணி தெரு,
முத்தமிழ் நகர்,**M.C.Road.**
தஞ்சாவூர் . 613007. செல்–99447 02482

அழைப்பின் மகிழ்வில்

**B. முஹம்மது இர்ஃபான் M.B.A.**
**அல்ஹாஜ். காதியா A. அப்துஸ்ஸலாம்,**
**Z. ஃபிர்தவ்ஸி ஃபரோஜான் M.s.,**
**Z.ஃபயாஸ் ஜீஸான் MCA.,**

தங்கள் அன்புள்ள,

**Mrs.& Mr. சேக்பரிது ப.ஜ.அ. அப்துல் ஜமீல் Hq**
**சேக்பரிது ஹாஜி. ப.ஜ.அப்துல் காசிம் &Brothers**
**S.A. ஹாஜா மொய்னுதீன்,**
**N.PJ. ஜாஃபர் சாதிக்**
3/138 – 6. தர்ஹா தெரு, சரபோஜிராஜ புரம்,
வழுத்தூர்.செல்– 9444821248

திருமணம்

# புத்திக் கெட்டாப் புனிதர்கள்....

ஆலிம் ஒருவரின் தவறை கண்ணியமாகச் சுட்டிக் காட்டிய கௌஸூல் அஃளம் (ரலி) அவர்கள்.

கௌஸூல் அஃளம் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் மாபெரும் மார்க்க அறிஞர் அபுல் ஃபரஜ் (ரஹ்) என்ற மாமேதை வாழ்ந்து வந்தார். கௌஸூல் அஃளம் (ரலி) அவர்களை ஏதோ ஒரு காரணத்தினால் அபுல் ஃபறஜ் (ரஹ்) அவர்களுக்குப் பிடிக்காது. கௌஸூல் அஃளம் (ரலி) அவர்கள் மீது எந்த அளவுக்கு வெறுப்பு என்றால் கௌஸூல் அஃளம் (ரலி) அவர்கள் தொழ வைக்கும் பள்ளிவாசலிலும் தொழ மாட்டார். அவர்களின் எந்தவொரு பயான், திக்ரு மஜ்லிஸுகளிலும் கலந்து கொள்ள மாட்டார்.

ஒரு நாள் மாமேதை அபுல் ஃபரஜ் (ரஹ்) அவர்கள் கடை வீதிக்கு பொருட்கள் வாங்கச் சென்றிருந்த போது அஸர் தொழுகைக்கு நேரமாகி விட்டது. உடனே பள்ளிவாசலுக்குள் சென்று, ஜமாஅத்தில் கலந்து கொண்டார். ஆனால், கௌஸூல் அஃளம் (ரலி) அவர்கள் தொழவைக்கும் பள்ளிவாசல் என அவர்களுக்குத் தெரியாது. கௌஸூல் அஃளம் (ரலி) அவர்கள் ஸலாம் கொடுத்ததும் ஒரு முரீதை அழைத்தார்கள். கடைசி வரிசையில் அபுல் ஃபரஜ் என்ற மாமேதை இருக்கிறார்கள். அவர்களிடம் சென்று தாங்கள் ஜமாஅத்தில் கலந்து கொள்ளும் அவசரத்தில் ஒளு செய்யாமல் தொழுதுவிட்டீர்கள் என்ற விஷயத்தை மிக மெதுவாக யாருக்கும் தெரியாமல் சொல்லிவிடு என்றார்கள். அதே போல் அவர்களிடம் அந்த முரீத் சொன்னதும் உடனே, அபுல் ஃபரஜ் (ரஹ்) அவர்கள் வேகமாக கூட்டத்தை விலக்கிக் கொண்டு சென்று, கௌஸூல் அஃளம் (ரலி) அவர்களின் கைகளைப் பிடித்து முத்தமிட்டார்கள். அதற்கு பிறகு, கௌஸூல் அஃளம் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து மாபெரும் இறைநேசராக மாறிவிட்டார்கள்.

*( காயல்பட்டினம் அப்துல் காதிர் மஹ்ளரி ஹள்ரத் அவர்களின் பயானிலிருந்து)*

***அளக்கும்போதும், நிறுக்கும்போதும் அளவைக் குறைத்தால் அளப்பரும் துன்பம் வரும்.***

# வினாக்கள்...விடைகள்...

***ரபீவுல் அவ்வல் மாதத்தில் இ.எம். மீடியா, ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை (துபை) நடத்திய வினா விடைப் போட்டியில் இடம் பெற்ற 63 கேள்விகள். பதில்கள் கட்டுரையின் இறுதியில்.....***

**1.** இஸ்லாத்தை முதன்முதலில் ஏற்றுக் கொண்டவர் ..................

ஒரு பெண், ஒரு சிறுவர், விடுதலை பெற்ற ஒரு அடிமை, ஒரு நண்பர் – வரிசைப்படி இவர்களின் பெயர் யாது?

A. ஹலீமா மற்றும் அம்ர், அப்பாஸ், அலி (ரலி)

B. பாத்திமா மற்றும் அலி , பிலால், அபூபக்கர்(ரலி)

C. கதீஜா மற்றும் அலி , ஜைது, அபூபக்கர் (ரலி)

D. ஆயிஷா மற்றும் அலி, பிலால், அனஸ் (ரலி)

**2.** நாயகமே தலை தூக்கி நலமாய் நிமிர்ந்து நின்று நாயனை வேண்டி நின்றார் நயவஞ்சகர் சாக – மேற்கூறிய பாடல் வரிகள் எந்த நிகழ்வைச் சார்ந்துள்ளது?

A. தாயிப் நகரில் கல்லடி பட்ட நிகழ்வின் போது

B. பத்ருப் போர் ஆரம்பமாகும் முன்னர்

C. தொழும்போது எதிரிகள் ஒட்டகைக் குடரைத் தம் முதுகில் போட்ட நிகழ்வின் போது

D. ஹள்ரத் பிலால் (ரலி) அவர்களை எதிரிகள் கசையால் அடித்த போது

**3.** எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தாத்பரியத்தில் நம்மை போன்றவர்கள் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்களின் கூற்றை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது.

A. முற்றும் சரி

B. முற்றம் பிழை

C. சில நேரங்களில் சரி

D. சில நேரங்களில் பிழை

**4.** மும்மை உணர்ந்தவர்கள் முழுமையறிந்தவர்கள் என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி அழகாகக் கூறப்பட்டுள்ள வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

A. அற்புத அகிலநாதர்

B. பாத்திமா நாயகியார் மாலை

C. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரலாறு

D. சுபுஹான மவ்லிது

**5.** நபிகள் நாயகம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதிரிகளின் மீது மண்ணை எறிந்த போது அது யாரால் எறியப்பட்டது என திருக்குர்ஆனில் கூறப்படுகிறது?

A. வானவர்களால்

B. ஜின்களால்

C. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால்

D. இறைவனால்

**6.** நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் நடத்தப்பட்ட அற்புதங்களில் விண்ணில் பிளக்கப்பட்டது எது?

A. திங்கள்

B. நிலவு

C. அம்புலி

D. மூன்றும் சரி

**7.** பாத்திமா நாயகியார் அவர்களை மணமுடிக்க ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில், அலி (ரலி) அவர்களுக்காக பெண் கேட்டுச் சென்றவர் யார்?

A. ஜுபைர்(ரலி)

B. பிலால் (ரலி)

C. அலி (ரலி)

D. அனஸ் (ரலி)

**8.** கைபர் கோட்டை முற்றுகையின் போது அப்போருக்குத் தலைமை தாங்கி வெற்றி வாகை சூடிய நபித் தோழர் யார்?

A. காலித் பின் வலீத் (ரலி)

B. உமர் கத்தாப் (ரலி)

C. அலி (ரலி)

D. அம்ர் (ரலி)

**9.** அற்புத அகிலநாதர் என்ற நூலின்படி, பாம்பின் நஞ்சை விடக் கொடியவனாகவும், நரக நெஞ்சம் படைத்தவனாகவும் கருதப்படுபவர் யார்?

A. இஸ்லாத்தை ஏற்காதவன்

B. பெருமானாரின் பகைஞன்

C. ஷரீஅத்தை பேணாதவன்

D. மூன்றும் பிழை

**10.** பாத்திமா நாயகியார் – அலி (ரலி) இவர்களின் திருமணத்தின் போது, நபிகளார் அவர்கள் குத்பா ஓதினார்கள் என்ற செய்தியும், பாத்திமா நாயகியார் – அலி (ரலி) இவர்களின் திருமணத்தின் போது, அலி (ரலி) அவர்கள் நானூறு திர்ஹம் மஹர் கொடுத்தார்கள் என்ற செய்தியும், பாத்திமா நாயகியார் மாலை என்ற நூலில் காணக் கிடைக்கின்றது என்ற கூற்று ...

A. தவறு

B. சரி

C. ஒரு செய்தி மட்டும் உள்ளது

D. இரண்டு கூற்றுகளும் முரண்பட்டுள்ளது.

**11.** பின்வருவனவற்றுள் பிழையானது எது?

A. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை மட்டுமே ஹஜ் செய்தார்கள்

B. கதிஜா நாயகியார் (ரலி) அவர்கள் மறைவிற்குப் பிறகே, ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவரகள் இரண்டாவது திருமணம் புரிந்தார்கள்

C. ஹஜ் கடமை – ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு கடமையாக்கப்ட்டது.

D. மேற்கூறப்பட்ட மூன்றும் பிழை

**12.** மிருகங்களாய் வாழ்ந்த மக்களை, மக்களாய் வாழ வைக்க எம் பெருமானார் என்ன செய்தார்கள்?

1. வெளி அறிவையும், உள் ஞானத்தையும் போதித்தார்கள்

2. வெளி அறிவை பேதித்தார்கள், இறைவனைக் காட்டிக் கொடுக்கவில்லை

3. இறைவனைக் காட்டிக் கொடுத்தார்கள் மற்றும் வேதத்தை தந்தார்கள்

4. வேதத்தை தந்தார்கள் மற்றும் வெளி அறிவை பேதித்தார்கள்

மேற்கூறப்பட்டவற்றில்,

A. முதல் மூன்றும் சரி

B. அனைத்தும் சரி

C. 1,3,4 மட்டும் சரி

D. 2,3, 4 மட்டும் சரி

**13.** பெருமானார் ரஸூலே கரீம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இடம் தேடி இஸ்லாத்தின் நாயகியாம் பாத்திமா நாயகியார் (ரலி) வருகையிலே நாயகமவர்கள் எவ்வாறு வரவேற்பார்கள்?

A. புனித நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து பாத்திமா நாயகியாரின் அன்பான திருக்கரம் பற்றுவார்கள்

B. புனிதமிக்க நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகியாரின் தூய நெற்றியிலே முத்தமிடுவார்கள்

C. புனித நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா நாயகியாரை, தாம் இருக்குமிடம் அமர்த்திக் கொள்வார்கள்.

D. மேற்கூறிய மூன்று நிகழ்வுகளும் சரி.

**14.** 1. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இரண்டு ஆண் மக்கள் நான்கு பெண் மக்கள்

2. பத்ரு யுத்தம் ஹிஜ்ரி மூன்று ரமலான் பிறை 17 – ல் நடைபெற்றது

3. இஸ்லாத்தை முதன்முதலில் ஏற்ற அடிமை பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

4. ஹுதைபிய்யா உடன்படிக்கை ஹிஜ்ரி 6 - ல் நடைபெற்றது

மேற்கூறப்பட்டவற்றில்,

A. 2 பிழை மற்ற மூன்றும் சரி

B. 1 பிழை மற்ற மூன்றும் சரி

C. 3 பிழை மற்ற மூன்றும் சரி

D. 4 பிழை மற்ற மூன்றும் சரி

15. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெருமையை அறியாது அவர்களை, வீணாக பாவ மொழி பேசும் கூட்டத்தைப் பற்றி அற்புத அகிலநாதர் புத்தகத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

A. அறியமையில் வீழ்வர்

B. பழிசுமந்து இறக்கும்

C. அறிந்து பாபம் செய்பவராவர்

D. மன்னிப்பை பெற இயலாதவர்

16. அஹ்லுல் பைத்துகளோடு இசைந்து நடப்பவரோடு இறைவனும் இசைவான் என்பதும், அஹ்லுல் பைத்துக்களை பரிசுத்தப்படுத்த நாடிய இறைவன், உயர்வான அவர்களின் பங்கம் தரும் அசுத்தம் தரும் பலவற்றை நீக்கினான் என்பதும் இறைவசனமாக இறங்க எந்த நிகழ்வு காரணமாக இருந்தது?

A. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்அஹ்லுல் பைத்துக்களை அறிவித்து இவர்களைப் பகைத்தவர்கள் என்னைப் பகைத்தவர்கள் என்று அறிவித்த தருணம்.

B. ஹிஜ்ரத்தின் போது பெருமானார் அவர்கள்தம் படுக்கையில் அலி (ரலி) அவர்களை இருக்கக் கேட்டுக் கொண்ட போது.

C. கதீஜா (ரலி) அவர்கள் மறைவின் பொழுது, பெருமானார் அவர்கள் கவலையில் இருந்த சமயத்தில்

D. மேற்கூறும் சமயம் அல்லாது வேறொரு சமயத்தில் (அல்லது) நிகழ்வில்

**17.** கிஸ்ராவின் பொற்காப்புகள் யாருடைய கரங்களில் அணிவிக்கப்படும் என்று ரஸூல்( ஸல்) அவர்கள் முன் அறிவிப்பு செய்தார்கள்?

A. உமர் (ரலி) அவர்களின் கரங்களில்

B. ஸூரக்கா பின் மாலிக் (ரலி) அவர்களின் கரங்களில்

C. உவைஸூல் கர்னைன் (ரலி) அவர்களின் கரங்களில்

D. அபூதல்ஹா (ரலி) அவர்களின் கரங்களில்

**18.** அற்புத அகிலநாதர் மண்ணில் கருவி செய்தனர், மண்ணில் அதனைப் போட்டனர். பின்பு நடந்தது என்ன?

A. உயிர் பெற்றெழுந்து பறந்து சென்றது

B. செய்த பின்னர் கலைத்து விட்டனர்

C. நீரில் கரைந்து போயின

D. பறப்பது போல் தோன்றியது

**19.** லாதஹ்ஸன் இன்னல்லாஹ ம அனா என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த சூழலில் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்?

A. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறிய போது

B. ஹிஜ்ரத் செய்து மதினாவில் நுழைந்த போது

C. விண்ணுலக பயணம் வந்த சென்று வந்த போது

D. தௌர் குகையில் எதிரிகள் நுழைந்துவிட்டதால் அபூபக்கர் (ரலி) அவர்கள் அச்சமடைந்த போது.

**20.** கீழ்க்கண்ட கூற்றுக்களில் தவறானது எது?

A. அன்பு நபிநாதர் (ஸல்) தம் கரங்களை அனாதையர் தலையில் வைத்தால் மணம் வீசும்

B. அற்புத அகிலநாதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கைகளைத் தொட்டு முத்தமிட்டவர் கைகளும் நறுமணம் கமழும்.

C. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் இனிய கரங்களை வைக்க மக்கள் தம் நோய்களும் பித்துப் பேய்களும் தங்கிடாது போய்விடும்.

D. மூன்றும் பிழை

**21.** எதன் பொருட்டு அலி (ரலி) அவர்களும், பாத்திமா நாயகி (ரலி) அவர்களும் 3 நாட்கள் நேன்பிருந்தார்கள் என் பாத்திமா நாயகியார் மாலை என்ற நூலில் வருகிறது?

A. பர்லான நோன்பை நோற்பதற்காக

B. நஃபிலான நோன்பை நோற்பதகாக

C. ஹஸன் ஹஸைனார் (ரலி) அவர்களி ன் பிணி நீங்க

D. தங்களுடைய பிணிகள் நீங்க

**22.** ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தமது திருமணம் நிகழ்ந்ததும் கதீஜா நாயகியர் (ரலி) அவர்கள் தமது அனைத்து செல்வங்களையும், அடிமைகளையும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தந்துவிட்டார்கள் என்பது...

A. அறியப்படவில்லை

B. வரலாறு இல்லை

C. பகுதி மட்டும் தந்தார்கள்

D. உண்மை வரலாறு

**23.** விரிகதிரை விட மேன்மைமிக்க சோதிநபி நாதரின் அருமை நிழல் தரையினில் என்றுமே வீழ்ந்ததில்லை. ஏன்?

A. அவர்கள் வந்து போது வெயிலினை மேகம் மறைத்து வந்தது

B. அவர்கள் நிழலை மேகம் மறைத்தது

C. மேகத்தை அவர்கள் மறைத்தார்கள்

D. அவர்களையும் அவர்கள் நிழலையும் மேகம் மறைத்தது.

**24.** பாத்திமா நாயகியாரின் வாழ்வையொட்டி இல்லறம் நல்லறமாவதும், சீர் இஸ்லாம் செழித்தோங்குவதற்கும் பெண்களுக்குக் கூறப்படும் உபதேசம்.

A. பாத்திமா நாயகியார் (ரலி) அவர்களை நேசிப்பதும் பின்பற்றுவதும்

B. இறையோனை, நாயகத்தை என்றென்றும் பொருந்திக் கொள்வது

C. எந்த நிலையிலும் இல்லாதவர்க்கு வழங்குவது

D. மேற்கூறிய மூன்றையும் செய்து வரல்.

**25.** நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கிய போது தாங்கள் எனக்கு சுதந்திரம் வழங்கியுள்ளீர்கள், ஆனால் நான் தங்களுடனேயே இருக்க விரும்புகிறேன் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதிருந்த அன்பின் மிகுதியால் கூறிய, அடிமையாயிருந்து சுதந்திரம் பெற்ற ஸஹாபி யார்?

A. பிலால் (ரலி)

B. ஜைது (ரலி)

C. ஹாரிஸ் (ரலி)

D. உவைஸ் (ரலி)

**26.** ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சத்திய இஸ்லாமிய போதனையை எடுத்துக் கூறும் வேளையில், இக்கொள்கையை விட்டுவிட்டால், எதையும் நபிகளாருக்குக் கொடுக்கக் குறைஷித் தலைவர்கள் முன்வந்த போது, தம் கரங்களில் ........... மற்றும் .......தந்திடினும் சத்தியக் கொள்கையை விட மாட்டேன் என்றார்கள்.

A. சூரியன்– விண்மீன்கள்

B. நட்சத்திரங்கள – நிலவு

C. இரவி – திங்கள்

D. மதி – விண்மீன்கள்

**27.** இஸ்லாத்தின் நாயகியார் என தூயவர்களால் போற்றப்படுபவர்கள் யார்?

1. சுவனத்தின் தலைவி
2. பாத்திமா பின்த் ரஸூல்
3. நபிகளாரின் ஈரக்குலை
4. பாத்திமுத்து ஜஹ்ரா (ரலி)

மேற்கூறியவற்றுள்,

A. அனைத்தும் சரி

B. 2 மற்றும் 4 மட்டும் சரி

C. 1 ம ற்றும் 3 மட்டும் சரி

D. 1 மற்றம் 2 மட்டும் சரி

**28.** பின்வருவனவற்றுள் பிழையானதைத் தேர்ந்தெடுக்கவும்.

A. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது இறுதிப் பிரச்சாரத்தை ஹஜ்ஜத்துல் விதாவில் மேற்கொண்டார்கள்.

B. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஃபாத்து ஆகும் தருவாயில்அவர்களின் தலையிலும் தாடியிலும் இருந்த மொத்த நரை முடிகள் 17

C. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது திருவுடலை மறைத்துக் கொண்டது ஹிஜ்ரி 8 ரபிய்யுல் அவ்வல் பிறை 12

D. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித பல் ஷஹீதான யுத்தம் உஹது யுத்தம்

**29.** கற்றிலாக் கலைக்கடல் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிப்பிடுவதன் யதார்த்தப் பொருள் யாது?

A. உம்மி நபி

B. அழகிய முன் மாதிரி

C. அகிலத்திற்கோர் அருட்கொடை

D. இறைஜோதி

**30.** குறையில்லாத நாயகத்தின் திரு முதுகின் மீது ஒட்டகைக் குடரைத் தன் கையால் போட்ட காஃபிர் யார்?

A. உக்பா

B. அபுஜஹ்ல்

C. அபுலஹப்

D. ஷைபா

**31.** எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மன்னிக்கும் தயாள குணத்தை எடுத்துக் காட்டும் பின்வரும் சம்பவங்களான,

1. உஹதுப் போரில் ஷஹீதான ஹம்ஸா (ரலி) அவர்களின் நெஞ்சைப் பிளந்து அவர்களின் ஈரலை மென்றுதுப்பிய ஹிந்தாவை எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மன்னித்தார்கள் என்ற நிகழ்வும்

2. தன்னை தூசித்துப் பாடிய கஃபு இப்னு ஜுஹைர் – ஐ எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மன்னித்தார்கள் என்ற நிகழ்வும்

A. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலே காணக் கிடைக்கின்றது.

B. முதல் சம்பவம் மாத்திரம் இருக்கின்றது

C. இரண்டாவது சம்பவம் மாத்திரம் இருக்கின்றது

D. இரண்டு சம்பவங்களும் வரலாற்றில் இல்லை

**32.** கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள்,

1. பூரணச் சந்திரனைப் போன்று பொலிவையுடையவர்கள்

2. மென்மையில் பூவைப் போன்றவர்கள்

3. கொடையிலே பாயும் அலையையுடைய கடலைப் போன்றவர்கள்

4 தைரியத்திலே காலத்திற்கு ஒப்பானவர்கள்

மேற்கண்டவற்றுள்,

A. 1 ம் 2 ம் பொருந்துவன

B. முதல் மூன்றும் பொருந்துவன

C. அனைத்தும் பொருந்தும்

D. 4 மட்டும் பொருந்தும்.

**33.** அலி (ரலி) – பாத்திமா (ரலி) அவர்களின் திருமணம் எப்போது நடைபெற்றது?

A. ஹிஜ்ரு 3 ரமளானில்

B. அலி (ரலி) அவர்களின் இருபதாம் வயதில் மற்றும் பாத்திமா (ரலி) அவர்களின் 15 ஆம் வயதில்

C. ஹிஜ்ரி 2 முஹர்ரம் மாதத்தில்

D. ஹிஜ்ரி 3 ஷஃபானில்

**34.** எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ருப் போர் முடிந்து திரும்புகையில் ஸஹாபாக்களைப் பார்த்து இப்பொழுது நாம் ஒரு சிறிய யுத்தத்தில் இருந்து பெரிய யுத்தத்திற்கு மீண்டு இருக்கிறோம் என்று கூறினார்கள். இமற்குஸஹாபக்ள் விளக்கம் கேட்க, ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெரிய யுத்தம் என்று எதைக் குறிப்பிட்டார்கள்?

A. ஷரீஅத்தினுடைய அமல்களை ஒழுங்காகக் கடைபிடிப்பது

B. பத்ருப் போருக்குப் பின்னால் வரக்கூடிய யுத்தங்களிலே பங்கெடுப்பது

C. மனிதன் தனது உள்ளத்தோடு போராடுவது

D. சரியான விடை இங்கே கொடுக்கப்படவில்லை

**35.** அவ்வுலகத்தோடு இவ்வுலகமும் எங்கள்அண்ணலெம்பெருமானார் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கொடைகளாம். லவ்ஹு – வலம் ஆகியவற்றின் கலையும், எம்பெருமானாரவர்களின் அறிவினின்றுமுள்ளவைகளாம் என்ற வரிகள்

1. மிகவும் பொருத்தமானது

2. அழகாகக் கூறப்பட்டுள்ளது

3. மிகைபடக் கூறப்படவில்லை

4. பொருத்தமில்லை

மேற்கூறியவற்றுள்,

A. 4 மட்டும் சரியானது

B. 1 மற்றும் 2 சரியானது

C. 1 மட்டும் சரியானது

D. முதல் மூன்றும் சரியானது

**36.** பாத்திமா (ரலி) அவர்கள் திருமணம் முடிந்ததும் தந்தையைப் பிரிந்து கணவருடன் செல்லுகையில் கண்கலங்கி நின்றனர். அப்போது நாயகம் அவர்கள் கூறியவை யாது?

A. அழ வேண்டாம் என்றார்கள்.

B. உள்ளத்தே மகிழ்வோடு இருந்திடுங்கள், அறிவிற் சிறந்த அலியாரை உங்களுக்குத் தந்தேன், குறையில்லா சன்மார்க்கக் குணக்குன்று அன்னவர், உம்மத் அனைவரிலும் உயர்வான பெண் நீங்கள் பொன்றா மனங்களுடன் பொறுமையாய் வாழ்க என்றார்கள்

C. நல்வாழ்வு வாழ்வீர்கள் . கவலை வேண்டாம் என்றார்கள்.

D. கவலைகளைக் களைந்திடுங்கள், சிறப்போடு வாழ்ந்திடுங்கள் என்றார்கள்.

**37.** நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் அல்லாஹ்வினுடைய அர்ஷ் என்பது.....

A. முஃமின்களுடைய இருதயம்

B. இறைவன் அமரக் கூடிய ஆசனம்

C. சொர்க்கத்தின் தராசு

D. போர்வாள்

**38.** இறைத்தூதர் இல்லையாயின் இவ்வுலகமும் அவ்வுலகமும் தோன்றியிருக்காது, இறைமறையும் வந்திருக்காது என்ற இந்த தத்துவார்த்த உண்மையை.....?

A. மூடர்கள் அறிய மாட்டார்கள்

B. அறியாதவர்கள்அறிவார்கள்

C. அறிந்தவர்கள் அறிய மாட்டார்கள்

D. அனைத்தும் பொருந்தும்

**39.** நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இவர்கள் என்னிலிருந்து உள்ளவர்கள் இவர்களை சுத்தப்படுத்தி வைப்பாய், ஈகை அன்பு வளரச் செய்வாய் என இறைவனிடம் யாரைக் குறித்து துஆ செய்தார்கள்?

A. பாத்திமா (ரலி) – அலி (ரலி)

B. ஜைனப் (ரலி) – உம்முகுல்தூம் (ரலி)

C. அபூபக்கர் (ரலி) – உமர் (ரலி)

D. அன்னை ஆமினா (ரலி) – தந்தை அப்துல்லாஹ் (ரலி) அவர்கள்

**40.** ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்த தத்துவம் என்ன? கீழ்க்கண்டவற்றுள் எவை பொருந்துகிறது.

A. அல்லாஹ் ஒருவன், அவன் தனித்தவன்

B. அல்லாஹ் வேறு, படைப்பினங்கள் வேறு

C. படைப்பினங்கள் அல்லாஹ்வை விட்டும் வேறானவைகள் அல்ல

D. பரிபூரணமே இறை ஆகும்.

A. 1, 3, மற்றும் 4 சரி

B. 2 மற்றும் 4 சரி

C. 1, 2, 3 சரி

D. அனைத்தும் சரி

**41.** சங்கைக்குரிய ஷைகு நாயகம் ஜமாலிய்யா செய்யிது கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்களால் எழுதப்பட்ட, அற்புத அகிலநாதர் எனும் நூலுக்கு சூட்டப்பட்ட பெயர் எவ்வகையில் பொருத்தமானது?

A. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முஃஜிஸாக்களை அழகுபடக் கூறியிருப்பதால்

B. அகிலநாதர் சிறப்புகளை அ கிலம் அறிய வழிவகை செய்திருப்பதால்

C. இறைவனின் அருளைப் பெறும் பாக்கியத்தை வழங்குவதால்

D. மூன்றும் பொருந்துவன.

**42.** கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடுக்கவும்.

A. ஹஸனும் ஹுஸைனும் முஹ்ஸீனும் உம்குல்தூம் மற்றும் ஸைனப்பும், அலி (ரலி) –பாத்திமா (ரலி) அவர்களின் பிள்ளைகள் ஆவர்.

B. ஹஸன் (ரலி) ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு பிறந்தார்கள்

C. ஹுஸைன் (ரலி) ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு பிறந்தார்கள்

D. ஹஸனார் மற்றும் ஹுஸைனாருக்கு பெயர் வைத்தவர்கள் அலி (ரலி) அவர்கள்

**43.** ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விண்ணுலகப் பயணத்தின் ( மிஃராஜின் ) போது, ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன எதுவரை மட்டும் செல்ல முடிந்தது?

A. லவ்ஹுல் மஃபூல்

B. ஹலீரத்துல்குத்ஸி

C. ஸித்ரத்துல் முன்தஹா

D. கன்ஸுல் மஃபிஆ

**44.** அற்புத அகிலநாதர் என்ற நூலைப் படித்த பின் நாம் செய்ய வேண்டியது என்ன?

A. நபிகளார்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நம் உயிரை விட மேலாக நேசிப்பது

B. நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மைப் போன்ற மனிதர் அல்லர் என்பதை தெளிவாக அறிந்து பிறரிடமும் கூறுவது

C. நபிகளி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்புக்ளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வது

D. மேற்கண்ட மூன்றையும் செய்வதைக் கடமையெனக் கொள்வது.

**45.** பாத்திமா (ரலி) அவர்கள் இறைவனுக்கு ஒவ்வொரு நாளும் அஞ்சிக் கொள்ளுங்கள், உங்களால் முடியுமான உதவிகளை மற்ற மக்களுக்குச் செய்யாவிடின் இறைவனின் தண்டனைக்கு அஞ்சிக் கொள்ளுங்கள் என்று யாருக்குக் கூறினார்கள்?

A. ஹஸன் (ரலி) அவர்களுக்கு

B. ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு

C. அலி (ரலி) அவர்களுக்கு

D. தமக்குத் தாமே கூறிக் கொண்டார்கள்.

46. உஹதுடைய யுத்த களத்தில் தான் இரத்த காயங்களுடன் இருந்தபோதும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தனது முதுகைக் கொடுத்து அங்கிருந்த கற்பாறையின் மீது ஏறுவதற்கு உதவிய ஸஹாபி யார்?

A. அபுது ஜானா (ரலி)

B. தல்ஹா (ரலி)

C. காலித் இப்னு வலீத் (ரலி)

D. அலி (ரலி)

47. கீழ்க்கண்டவற்றுள் எந்த வரிகள் அற்புத அகிலநாதர் நூலில் இடம் பெற்றுள்ளது?

A. அன்று பிறந்த பாலகனோடு அண்ணல் பேசினர்

B. அன்று பிறந்த பாலகன் அண்லோடு பேசினார்

C. அன்று பிறநத பாலகனும் அண்ணலும் பேசினர்

D. அன்று பிறந்த பாலகன் ஆர்வமோடு பேசினார்.

48. பத்திமா நாயகியார் (ரலி) அவர்கள் ...

1. எளிமையை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்

2. எளிய உணவையேஉண்டார்கள்

3. வேலை செய்து மெலிந்தும் அவர்கள் மனம் கலங்கவில்லை

4. பணிப் பெண்ணேடு சேர்ந்து பணி செய்வர்கள்.

மேற்கூறியவற்றுள்,

A. ஒன்று பிழை மூன்று சரி

B. இரண்டு சரி இரண்டு பிழை

C. நான்கும் சரி

D. மூன்று பிழை ஒன்று சரி

**49.** ஒருமுறை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குத்பாவுக்காக மிம்பரில் ஏறும் பொழுது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் துஆ கேட்க நாயகம் அவர்கள் மூன்று விடயங்களுக்காக ஆமீன், ஆமீன், ஆமீன் என்று கூறினார்கள். அதில் ஒன்று, எவர் ஒருர் ரமலான் மாதத்தை அடைந்ததும் நோன்பு நோற்கவில்லையோ அவர் நாசமாகட்டும், இரண்டாவது, எவர் ஒருவர் தனது வயதான தாய் தந்தையரைப் பெற்றிருந்தும் அவர்களை கவனிக்கவில்லையோ நாகமாகட்டும்.. என்று கூறி அதில் மூன்றாவதாக ................ என்று கூறும்போது ஆமீன் என்று கூறினார்கள்.

A. வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை செய்யாதவர்கள் நாசமாகட்டும்

B. ஜனாஸா ஊர்வலத்தின் போது எழுந்து மரியாதை செய்யாதவர்கள் நாசமாகட்டும்

C. விருந்தினர்களை உபசரிக்காதவர்கள் நாசமாகட்டும்

D. எவர் ஒருவர் தனது பெயரைக் கூறுமிடத்து ஸலவாத்துச் சொல்லவில்லையோ அவர் நாசமாகட்டும்

**50.** கீழ்க்கண்ட கூற்றுக்களில் எவை தவறானது?

1. தூரைப் பிடிக்க வந்த குதிரையின் பாதம் மண்ணிற் புதைந்தது

2. தூதர் மண்ணை அள்ளி வீச எதிரிகள் பார்வை தெரிந்தது

3. நாயகத்தின் தலை மேல் கல்லைப் போடும் போது பெருங்கல் ஒன்று வந்து பாதுகாத்தது

4. எதிரிகள் கண்களுக்கு நாயகத்தின் தோற்றம் மறைந்தது

A. 1 மட்டும்

B. 1 மற்றும் 3

C. 2 மட்டும்

D. 2 மற்றும் 3

D. அபூஹுரைரா (ரலி)

**53.** நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழைத்த போது, அக்கரையில் இருந்து நீரில் மிதந்து வந்தது எது?

A. செடி

B. இரும்பு

C. பெரிய கல் ஒன்று

D. மரம்

**54.** தம் மறைவின் போது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் மகளை அழைத்து தம் இறப்பை அறிவித்தார்கள். அது கேட்டு நாயகியார் அழுதார்கள். அப்போது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன செய்தியைக் கேட்டு பின் சிரித்தார்கள். நாயகியார் பின்வரும் எந்த செய்தியைக் கேட்டு சிரித்தார்கள்?

A. வருந்த வேண்டாம், இறைவன் உங்களுக்கு துணையாக என்றும் இருப்பான்

B. அழ வேண்டாம் எனக்குப் பின் விரைவில் என்னிடம் வருவீர்கள்

C. அழ வேண்டாம். ஹஸன் (ரலி) மற்றும் ஹுஸைன் (ரலி) அவர்களை விட்டுச செல்கிறேன்.

D. பொருந்திக் கொள்வீர். சொர்க்கத்தில் இடம் உண்டு.

**55.** ஒருமுறை மஸ்ஜிதுந் நபவியில் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கூறும் சமயம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் பெயர் கேட்டதும் மனம் நெகிழ்ந்து தங்கள்து பெருவிரல் நகங்களை உதட்டில் வைத்து முத்தி, கர்ரத் ஐனீ பிக யாரஸூலல்லாஹ் தங்களைக் கொண்டு எனது நேத்திரங்கள் குளிர்ச்சியடையுமாக என்று ஒரு நபித்தோழர் கூற, பாங்கு முடிந்ததும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், என் மீது அன்பின் மிகுதியால் எவர் ஒருவர் இது போன்று செய்வாராயின் அல்லாஹ் அவரது குற்றங்களை மன்னித்து விடுவான் என்று கூறினார்கள். மேற்குறிப்பிட்ட வழிமுறையை நமக்கு அறிமுகப்படுத்திய நபித்தோழர் யார்?

A. அபூபக்ர் சித்தீக்(ரலி)

B. உமர் இப்னு கத்தாப் (ரலி)

C. உஸ்மான் (ரலி)

D. அலி இப்னு அபூதாலிப் (ரலி)

**56.** மதி பிறந்த நாள் எந்த நாள் என்று அற்புத அகிலநாதர் நூலில் கூறப்பட்டுள்ளது?

A. மதி பிளந்த நாள் – ரபிய்யுல் அவ்வல் பிறை 12

B. மதி பிறந்த நாள் – நபிகள் நாயகம் (ஸல்) பிறந்த நாள்

C. மதி பிறந்த நாள் – ரபிய்யுல் ஆகிர் பிறை 12

D. மதி பிளந்த நாள் – நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த நாள்

**57.** உங்களை விட அழகான யாரையும் என் கண்கள் கண்டதில்லை. உங்களை விட அழகான ஒருவரை எப்பெண்ணும் ஈன்றதில்லை. எல்லாக் குறைகளை விட்டும் நீக்கப்பட்டவர்களாக எக்குறையும் இல்லாதவர்களாக நீங்கள் படைக்கப்பட்டுள்ளீர்கள்.நீங்கள் விரும்பியது போன்று நீங்கள் படைக்கப்பட்டுள்ளீர்கள்.

மேற்கூறப்பட்ட மவ்லிது வரிகளைக் கொண்டு நபிகளாரின் முன்பாகவே நபிகளாரைப் புகழ்தோதிய நபித்தோழர் யார்?

A. ஹாஷிம் இப்னு ஷாபித் (ரலி)

B. ஹஸ்ஸான் இப்னு ஷாபித் (ரலி)

C. கஃபு இப்னு ஜுபைர் (ரலி)

D. ஜைத் (ரலி)

**58.** அற்புத அகிலநாதர் புத்தகத்தின் படி, வஞ்சகர்கள் வாழ்ந்த மக்காவில்... நபிகளார் தோன்றினர்.

A. பாலைவனத்தில் ரோஜாவாக

B. சேற்றில் மலர்ந்த செய்தாமரையாக

C. இருளில் ஒளியாக

D. மன்னராக

51. கீழ்க்கண்ட வாக்கியங்களில் பிழையானது எது?

1. பாத்திமா நாயகியைப் பார்த்ததில்லை யெவ்வாணும், பாத்திமா நாயகியும் பார்த்ததில்லை ஆண்களையே

2. பாத்திமா நாயகியர் உண்மை உரைப்பதில் பெருமானாருக்கும், பெண்ணின் பெருமையில் பெரிதெவர்க்கும் ஒப்பாகார்

3. பாத்திமா நாயகியார் இறுதி நாளை எண்ணி எப்பொழுதும் அஞ்சுவார்கள்

4.ஏழை எளியோருக்கு உதவுவதில் பாத்திமா நாயகிக்கு யாரும் ஒப்பாகார்.

மேற்கூறியவற்றுள்,

A. 1 பிழை மற்ற மூன்றும் சரி

B. 2 பிழை மற்ற மூன்றும் சரி

C. 3 பிழை மற்ற மூன்றும் சரி

D. 4 பிழை மற்ற மூன்றும் சரி

52. எவர் ஒருவர் தனது மனைவி, மக்கள், தாய், தந்தை, சொத்துக்கள் மேலும் தனது உயிரையும் விட என்னை நேசிக்காத வரை அவருடைய ஈமான் பூர்த்தி ஆகாது என்ற செய்தியை ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யாரைப் பார்த்துக் கூறியதன் வாயிலாக நாம் அறிகிறோம்..

A. அபூபக்கர் (ரலி)

B. உமர் (ரலி)

C. பிலால் (ரலி)

59. கோடிட்ட இடத்தை நிரப்புக

மாவரைக்கும் போதினிலே மயக்கமாய் ஆட்டுக்கல்லில் ஆவதறியாது சாய்வார் ....................

A. பணிவான பாத்திமத்தே

B. அன்பான பாத்திமத்தே

C. அறிவான பாத்திமத்தே

D. கனிவான பாத்திமத்தே

60. இறைவன் முதன் முதலில் தன்னிலிருந்து எதை வெளிப்படுத்தினான்?

A. பஞ்ச பூதங்களை

B. ஜிப்ரயீல் (அலை) அவர்களை

C. ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜோதியை

D. மலாயிக்காமார்களை

**61.** உயர்ந்த தங்க மலைகள் உலக நபிநாதரின் வறுமையைப் போக்க புதுமையாய்அழைத்து நின்றபோது அகிலத்தையே தம் கையில் வைத்துக் காத்திடும் அற்புத நாதர் அவர்கள் வேண்டாம் எனக் கூறக் காரணம்...

A. தம் உயர்வைக் காட்ட வேண்டியே

B. அவர்கள் நபி என்பதால்

C. அவர்கள் தூதர் என்பதல்

D. மக்களை வழிநடதத வந்ததனால்

**62.** பாத்திமா நாயகியர் (ரலி) வீட்டு வேலைக்குத் தனக்குதவியாக வேலைக்காரியைத் தருமாறு, நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் கேட்ட பொழுது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்ன செய்தார்கள்?

A. ஒரு உதவியாளரை உடன அனுப்பி வைத்தார்கள்

B. அலி (ரலி) அவர்களிடம் கேட்கச் சொன்னார்கள்.

C. 33 முறை சுப்ஹானல்லாஹ், 33 முறை அல்ஹம்துலில்லாஹ், 34 முறை அல்லாஹு அக்பர் என்று தினமும் ஓதி வர அல்லாஹ்வின் அருள் தேடி வரும் என்றார்கள்.

D. பிறகு அனுப்பி வைப்பதாகக் கூறினார்கள்.

**63.** கீழ்க்கண்ட இக்குணங்களுக்குச் சொந்தக்காரர் யார்?

இவர்கள் கூலிக்கு நூல் நூற்பார்கள். கிழிந்த புடவைகளைத் தாமே தைத்துக் கொள்வார்கள். பசியுடன் வந்தவர்க்குக் கொடுப்பதற்கு இல்லையெனினும் தம் உணவைக் கொடுத்திடுவார். சோதனைகள் இடையிடையே வந்தபோதும் குறையின்றி வெற்றி காண்பார்.A. கதீஜா (ரலி)

B. ஆமீனா அம்மையார் (ரலி)

C. அன்னை ஹலீமா (ரலி)

D. ஸஹ்ரா (ரலி)

# விடைகள்

| | |
|---|---|
| 1. | C |
| 2. | C |
| 3. | A |
| 4. | B |
| 5. | D |
| 6. | D |
| 7. | C |
| 8. | C |
| 9. | B |
| 10. | B |
| 11. | D |
| 12. | C |
| 13. | D |
| 14. | A |
| 15. | B |
| 16. | A |
| 17 | B |
| 18 | A |
| 19. | D |
| 20. | D |
| 21. | C |
| 22. | D |
| 23. | A |
| 24. | D |
| 25. | B |
| 26. | C |
| 27. | A |
| 28. | C |
| 29. | A |
| 30. | A |
| 31. | A |
| 32. | C |
| 33. | B |
| 34. | C |
| 35. | D |
| 36. | B |
| 37. | A |
| 38. | A |
| 39. | A |
| 40. | A |
| 41. | D |
| 42. | D |
| 43. | C |
| 44. | D |
| 45. | D |
| 46. | B |
| 47 | B |
| 48 | C |
| 59. | D |
| 50. | C |
| 51. | B |
| 52. | B |
| 53. | C |
| 54. | B |
| 55. | A |
| 56. | B |
| 57. | B |
| 58. | B |
| 59. | B |
| 60. | C |
| 61. | A |
| 62. | C |
| 63 | D |

# செய்யிது ஆசியா உம்மா.

செய்யிது ஆசியா உம்மா (பொ.யு. 1868 – 1948 ) கீழக்கரையில் வாழ்ந்த இஸ்லாமிய மார்க்கஞானி. சூஃபி மரபில் வந்தவர். இலக்கியங்களைப் படைத்தவர். வள்ளல் சீதக்காதியின் தம்பி பட்டதது மரைக்காயர் என்னும் முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயரின் மகனாகிய முஹம்து அபூபக்ர் மரைக்காயருக்கும் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் மகள் சாரா உம்மாவுக்கும் பிறந்த வள்ளல் அவ்வாக்காறு மரைக்காயர் எனப் புகழ்பெற்ற அப்துல் காதிர் மரைக்காயர்.

இவரே கீழக்கரை ஜும்ஆ பள்ளிவாசலையும், கீழக்கரை புதுப் பள்ளிவாசலையும், காயல்பட்டினம் புதுப் பள்ளிவாயிலையும் கட்டுவித்தவர். அவரின் மகள் வயிற்றுப் பேரரே இரண்டாம் சீதக்காதி என அழைக்கப் பெறும் ஹபீபு அரசர் என அறியப்படும் ஹபீபு முஹம்மது மரைக்காயர்.

ஹபீபு மரைக்காயரின் இளைய சகோதரரின் பேத்திதான் ஆசியா உம்மா. தந்தை பெயர் ஹபீபு முஹம்மது மரைக்காயர். ஆசியா உம்மாவின் மூதாதையர்கள் எட்டையபுர மன்னர்களுடன் நெருக்கமான நட்புறவு கொண்டிருந்தனர். இவருடைய குடும்ப முன்னோர்களில் ஒருவரான ஹபீபு அரசர் சவூதி அரேபியாவின் ஜித்தா நகருக்கும் புனித மக்காவுக்கும் இடையே தோன்றியது சிறப்புக்குரியதாக நினைவு கூறப்படுகிறது. சேதுபதி மன்னரின் அனுமதியுடன் கீழக்கரையில் 1754 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட வர்த்தகப் பண்டகசாலை ஆசியா உம்மாவின் முன்னோர்களுக்குச் சொந்தமானது. அவர்கள் பல கப்பல்களுக்கு உரிமையாளர்களாக இருந்து கடல் வணிகத்தில் முனைத்திருந்தனர்.

ஆசியா உம்மாவின் இளமையில் கீழக்கரையில் வாழ்ந்து வந்த கல்வத்து நாயகம் சையிது அப்துல் காதிர் அவர்களின் முதன்மைச் சீடரானார்.

பெரும்பாலும் இறைத் தியானம், தொழுகை ஆகியவற்றில் ஈடுபட்டு வீட்டு மாடியில் தனிமையாகக் காலத்தைச் செலவிட்டார். அதனால் மேல்வீட்டுப் பிள்ளை என்ற செல்லப் பெயர் சூட்டி அழைத்தார்கள். ஒசக்கம்மா என்னும் பெயரும் இவருக்கு இருந்தது. புனித ஹஜ் கடமையை ஆற்றினார்.

அப்துல் ஹன்னான் என்கிற புலவரிடம் கவிதையியலும் அறபு மொழியில் இலக்கணமும் கற்றவர். ஆசியா உம்மா தன் குருநாதர் ஹல்வத் நாயகத்தைச் சந்திப்பதற்கும் கீழக்கரைக் கடற்கரையில் தனது தென்னந்தோப்புக்குச் சென்று தியானிப்பதற்கும் மட்டுமே வீட்டை விட்டுவெளியே வருவது வழக்கம்.

இவர் வசித்த இல்லம் கீழக்கரை ஓடைக்கரைப் பள்ளிக்கு அருகில் இருந்திருக்கிறது. இவர் அறபுத் தமிழ் வடிவில் எழுதினார். இவருடைய பாடல்கள் அறபுத் தமிழிலிருந்து தமிழ் எழுத்து வடிவத்துக்குக் கொண்டு வந்தவர் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த புலவர் அகமது பஷீர்.

ஆசியா உம்மா பாடிய பாடல்கள் மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிகா இரத்தினம் ஆகிய தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. கண்ணி, விருத்தம், துதி, இன்னிசை, ஆனந்தக் களிப்பு, கும்மி, வெண்பா, பதிகம், மாலை, தாலாட்டு ஆகிய யாப்பு வடிவங்களில் பாடல்களைப் பாடியுள்ளனர்.

மகான் ஆரிபு நாயகர், நாகூர் ஷாகுல் ஹமீது, குணங்குடி மஸ்தான் சாஹிபு, இமாம் கஸ்ஸாலி முதலானோரைச் சிறப்பிக்கும் கருப் பொருளைக் கொண்ட பாடல்களை எழுதினார்.

அல்லாஹ்வின் 99 பெயர்களைச் சிறப்பிக்கும் அஸ்மாவுல் ஹுஸ்னா முனாஜாத்தும், 99 நாமங்கள் எனும் மற்றொரு பாடல் தொகுப்பும் உள்ளன.

ஆசியா உம்மா, தான் பெற்ற ஆன்மிக அறிவைப் பகிர்ந்து கொண்டுள்ளார். அதில் உரைநடை வடிவிலான பகுதிக்குத் தரீகுஸ் ஸாலிஹீன் என்று பெயர். அதில் ஜகாத் (ஏழை வரி) பற்றி செய்யிது ஆசியா உம்மா சொல்லியிருப்பதை ***இப்போது*** எனும் இணையதளம் பதிவு செய்துள்ளது. அதில், நூறு ரூபாய் கைவசம் இருந்தால், இரண்டரை ரூபாய் ஜகாத் கொடுக்க வேண்டியது நமக்கேற்பட்ட கடன்.

ஜகாத், ஸதகாவை கோபம், கடுகடுப்பு, கொடுகொடுப்பு, முணுமுணுப்புடனே கொடுக்கவே கூடாது. இப்படிக் கொடுத்தால் அதில் யாதொரு சவாபு பிரோயோஜனமும் கிடையாது. அல்லாஹு தஆலா நமக்கு முதலைத் தந்து, ஏழைகளுடைய முதலையும் ஒன்றாகச் சேர்த்துத் தந்திருக்கிறான்.

ஆதலால் அவர்களுக்குக் கொடுக்கிற விதம் குளிர்ந்த முகமாவும், இரக்கச் சிந்தனையுடன், உகப்புடனே கொடுக்க வேண்டியது, நமக்குத் தந்த முதல் ரிஸ்குகளில் எத்தனையெத்தனை ஹல்குகளுக்கோ (படைப்புகளுக்கு) அல்லாஹ் பங்கிடுகிறான். எத்தனை காக்கை, குருவியோ, பூனை நாயோ, ஈ எறும்போ,

மனுவோ இலற்றிற்குப் போகிறது.  ஏக ரப்புல் ஆலமீன் ரிஸ்கு கொடுக்கும் விதங்களை நன்றாய்க் கவனித்து ஆழிய கருத்தாய் ஆராய்ந்துணர் என்றுள்ளது. ஆசியா உம்மா தமது குடும்ப முன்னோர்தகளின் திருப்பணிகளைச் சிறப்பித்து பாடல்கள் இயற்றினார்.  ஹபீபு அரசர் மாலை, கவ்த்து நாயகம் முனாஜாத்து, கல்வத்து நாயகம் துதி, கல்வத்து நாயகம் இன்னிசை, பல்லாக்கு தம்பி முனாஜாத்து, பல்லாக்கு ஒலி துதி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

ஆசியா உம்மா இயற்றிய ஞான ரத்தினக் கும்மி 110 கண்ணிகளைக் கொண்டது.  ஞானத்தை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி தனது முன்னால் நிறுத்தி, ஞானப் பெண்ணே என அழைத்துப் பாடும் கும்மிப் பாடல்கள் இவை.

கருத்தை  உன்னிலே தான் அடைத்து
இறைக் காதலே மிக ஆசை கொண்டால்
பொருந்தும் பூலோக வானலோகம்
எல்லாப் புகழாம் இரத்தின ஞானப் பெண்ணே

*(இரத்தின ஞானக் கும்மி)*

கர்ப்பப்பைக்குள் கண் சிரசு கைால் வாய் மூச்சு சப்தம்
அற்புதமாய் இன்ஸானாய் அமைத்த அறிவானந்தமே
இன்ஸானுக்குள்ளே இறை ஈரேழு லோக மெல்லாம்
இன்ஸான் தானாக இலங்குது அறிவானந்தமே

*(அறிவானந்தக் கண்ணி)*

ஆசியா உம்மாவின் பேத்தி அகமது மரியத்தின் முயற்சியினால் மெய்ஞ்ஞானத் தீ ப இரத்தினம் நூல் அச்சிடப்பட்டது.  பின்னர் செய்யிது  ஆசியா உம்மாவின் மகன் இ.சு.மு. அப்துல் காதிர் சாஹிப் மரைக்காயரின் மனைவி இ.சு. ரஹ்மத் பீவி உம்மா இந்த நூலைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

**நூல்கள்**

மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிகா இரத்தினம், 99 நாமங்கள் அஸ்மாவுல் ஹுஸ்னா, ஞான இரத்தினக் கும்மி, ஹபீபு அரசர் மாலை, கல்வத்து

நாயகம் முனாஜாத்து, கல்வத்து நாயகம் துதி,, கல்வத்து நாயகம் இன்னிசை, பல்லாக்கு தம்பி முனாஜாத்து, பல்லாக்கு ஒலி துதி.

***மெய்ஞ்ஞானப் பாடல்களில் சில வரிகள்.....***

தன்னை அறிந்துணர சதானந்த நிஷ்டையருள்

என்னை உன்னில் சேர்த்தே ஏக பராபரனே

ஆவி அகலுமுன்னே ஆண்டவனே உன்னருளை

ஏவி என்னில் வரச்செய் ஏக பரிபூரணனே

என்னை உற்றுணர்ந்தேன் ஏதுமிலை உன்னையன்றி

என்ன கதி தருவாய் ஏக பரிபூரணேனே.

என்னிலே நீயன்றி எவருண்டு ஒன்றுமில்லை

என்னை ஆராய வேண்ணாம் இறையேகப் பாரனவனே

எந்தனுக்குள்ளே இலங்கும் உயர் சூட்சியத்தை

விந்தையுடன் காட்டியருள் வேதா சதக் வலியே

பேசமுடியாத உயர் பேரின்ப சாகரத்துள்

ஆசையுடன் முழுக அருளும் சதக்வலியே

ஆசியா உம்மாவின் பாடல்கள், திருக்குர்ஆனின் பொருள்சாரத்தைக் கொண்டுள்ளன. அடிப்படைக் கருத்துக்களைத் திருக்குஆன் கூறும்பொழுது,

*இறை வண்ணத்தில் தோய்வீராக இறைவனைப் போல் அதிகமாக வண்ணத்தைக் கொடுப்போர் யார் - (திருக்குர்ஆன் 2 : 138)*

*நான் உங்கள் உயிர் (நப்ஸ்) களிலே இருக்கிறேன். என்னை நீங்கள் பார்க்க வேண்டாமா - ( திருக்குர்ஆன் 51 : 21)* என்கிறது . இக்கருத்தை ஆசியா உம்மாவின் பாடல்களில், பல இடங்களில் ஒப்பிட்டுக் காணலாம்.

தமிழ் மொழி அரபு எழுத்துக்களில் எழுதப்படும் அரபுத்தமிழ் தமிழிலக்கியத்தின் வளமிக்க ஒரு பாதை. அதில் பெரும்பாலும் மத நூல்களே எழுதப்பட்டுள்ளன. இலக்கியச்சுவை மிக்க நூல்களில் ஆசியா உம்மாவின் கவிதைகளுக்கே முதன்மை இடம்.

குணங்குடி மஸ்தானைப் பலரும் அறிந்தவர். ஆனால் சம காலத்தில் சூஃபி ஞானி செய்யிது ஆசியா உம்மாவைப் பலர் அறியவில்லை. இவர் எழுதியுள்ள மெய்ஞ்ஞானப் பாடல்கள் எவ்விதமான போலித்தனமும் அற்ற சுய முத்திரை கொண்ட எளிமையான உயிரோட்டத்தில் பிறந்தவை என்று **பிரமிள்** (பாதையில்லாப் பயணம்) குறிப்பிடுகிறார்.

ஆசியா உம்மா எண்பது வயதில் 1948 - ஆம் ஆண்டில் கீழக்கரையில் காலமானார். குடும்ப முன்னோர் ஹபீப் அரசரின் நினைவு வளாகத்தில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

*- ரஹமத் ராஜகுமாரன்*

# குணங்களின் ரகசியம்.

*சீடரின் கேள்விக்கு மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் அற்புத பதில்கள்.*

**விஷம் என்பது என்ன?**

நமது தேவைக்கு அதிகமான அனைத்தும் விஷமே. அது நமது அதிகாரமாக, செல்வமாக, பசியாக, அகங்காரமாக, பேராசையாக, சோம்பேறித் தனமாக, காதலாக, லட்சியமாக, வெறுப்பாக, எதுவாகவும் இருக்கலாம்.

**அச்சம் என்பது என்ன?**

எதிர்பாராதவற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பதே அச்சமாகும். அதை நாம் ஏற்றுக் கொண்டால் அது சாகசமாகிவிடும்.

**பொறாமை என்பது என்ன?**

பிறரிடம் உள்ள நல்லவற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பதே பொறாமை ஆகும். அதை நாம் ஏற்றுக் கொண்டால் அதுவே நமக்கு உத்வேகமாகிவிடும்.

**கோபம் என்பது என்ன?**

நமது சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதே கோபமாகும். ஏற்றுக் கொண்டால் அது சகிப்புத் தன்மையாகும்.

**வெறுப்பு என்பது என்ன?**

ஒருவர் எப்படி இருக்கிறாரோ அவரை அப்படியே ஏற்றுக் கொள்ள மறுப்பது, ஒருவரை நிபந்தனைகளின்றி ஏற்றுக் கொண்டால் அது அன்பாகி விடும்.

*மெஸ்மரிச வித்தையின் மகிமை*

# சுயம் பிரகாசம்

*வழுத்தூர், அஸ்ஸையித். முஹம்மது தாஹிர் பாவா வலிய்யுல்லாஹ் ஹஸனீ, காதிரீ (ரலி) அவர்களின் சுயம்பிரகாசம் நூலிலிருந்து..*

சாதாரணமாக ஜனங்களுக்கு அவர்களின் சூட்சுமம், சரீரத்தை விட்டும் வெகு தூரம் வரையில் சென்று விட்டால் அந்தத் தொடர் அற்றுப் போகும். இறந்து போன மனிதர்களை கூப்பிடுபவர்கள் தன் எண்ணங்களை ஒன்றுபடுத்தி, மரித்த ஆன்மாக்களை தன் பாரிஸம் இழுத்து அழைக்கும் போது, தாம் மூர்ச்சையாகி தமது சூட்சுமம் கழன்று சபையிலுல்லவர்களின் – இறந்து போன சொந்தக் காரர்களின் ரூபத்தில் சில சமயம் வெளியாவதும் உண்டு. இப்படி வெளியாவதற்கு சபையார்களின் வலுவான சித்தமல்லது ஜீவ காந்த ஒளியே காரணம்.

இதற்கு ஆனிமல் மேக்னடிசம் அல்லது மக்னாத்தீஸெ ஹைவானி என்று சொல்லப்படும். இதற்கு ரேஸ்னெக் என்பவர் பிரெஞ்சு பாஷையில் ஒடைல் அதாவது ஒரு வகை ஒளி என்று சொல்லுகிறார்கள். சிலர் இதை ஸோல் ஒரா அதாவது ஆன்மாவின் ஒளி என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் இதை எலெக்ட்ரிசிட்டி அதாவது, மின்சாரம் என்றே கூறுவார்கள். ஆனால், நட்சத்திரங்களின் தத்துவங்கள் உலகத்தில் எல்லா வஸ்துவிலும் சென்று இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அநேக விஷயங்களில் ஒற்றுமையான இருந்த போதிலும், அநேக விஷயங்களில் விகர்ப்பமாகவே இருக்கின்றன. இது போலவே மின்சாரமும், காந்த சத்தும், ஜீவ காந்த ஒளியும், இன்னும் வேறு வகையான மற்ற அநேக வித தாதுக்களும் உலகத்தின் ஒவ்வொரு வஸ்துவிலும் நிறைந்திருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அநேக விஷயங்களில் ஒற்றுமையாகவும், அநேக விஷயங்களில் வேற்றுமையாகவும் இருக்கின்றன. அன்றி, ஒரே தாத்தாகிய காந்த சத்து அல்லது மின்சாரம் அல்லது, ஜீவ காந்த ஒளு அல்லது மற்ற தாது இவைகளில் ஏதேனும் ஒன்றை தனித்தனியே ஒவ்வொரு வஸ்துவிலும் பரிசோதித்தால் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வஸ்துவிலும் பல தன்மையாகவே இருக்கின்றன. இதைக் குறித்து இவ்விடத்தில் விஸ்தரிக்க முடியாது. ஸைன்ஸ் ஆர் நேச்சுரல் ஃபிளாசஃபி அதாவது தத்துவ ஞானம் அல்லது இயற்கைப் பிரமாணங்களை வாசித்திருப்பவர்கள் நன்றாய் அறிந்திருப்பார்கள்.

அப்படியிருந்த போதிலும்,சகல மூலா தாரங்களுக்கு மூலமாகவும், ராஜனாகவும் இருந்து சகல மூல தாதுக்களையும் அடிமையாக அடக்கி ஆளக்கூடியதும், எல்லாவற்றையும் விட அதிக வலுவான தத்துவமுடையதும், பெரிய கிரகங்கள் தொடுத்து சிறிய அணு வரையில் ஆகாயம் உட்பட எங்கும் வியாபித்திருப்பதும் ஜீவ காந்த ஒளியே. இதற்கு முன் மற்றவைகள் மிகவும் அற்பமானவைகள். இதன் மகத்துவத்தை ஒருவராலும் விவரிக்க முடியாது. இதற்கு மறைவுகளைக் காட்டுகிற சக்தியுண்டு. இது பூரணமான ஞானமுடையது. எல்லா வஸ்துக்களுக்கும் இதுவே ஞான சூரியனாக இருந்து ஞானத்தைக் கொடுக்கின்றது. இதன் விளைவு ஸ்தலம் கடவுளின் உள்ளமையாய் இருக்கின்றது. இதை கடவுளின் சித்தம் அல்லது சித்த தத்துவம் என்றே சொல்ல வேண்டும். கடவுளுக்கும் மற்ற வஸ்துக்களுக்கும் இருக்கின்ற சம்பந்தத்தினால், மற்ற வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று இயற்கையாக இந்தத் தத்துவத்தைப் பிரயோகிப்பது போல நாமும் நமது சித்தப்படி மற்ற வஸ்துக்களின் பேரில் இயற்கையாக இந்தத் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம். இது நமது நாட்டத்தினால் அசைவில் வருகின்றது. இதைப் பிடித்து அசைத்தால் உலகம் முழுமையையும் அசையக் கூடியதாய் இருக்கின்றது. தற்போதுள்ள கல்வி வான்களுக்கு இதைப் பற்றிய விஷேசங்கள் சரியாக விளங்கவில்லை. சந்திரன், சூரியன் முதலானவைகளும் இதற்கு முன் பிரகாசமற்றவைகள்.

இன்னும் இந்த ஒளியை நித்திரை செய்பவனிடம் ஒரு மனிதனுடைய ரூபம் அல்லது, ஒரு மிருகத்துடைய ரூபத்தில் அனுப்பி அவனுடன் பேச வைக்கலாம். எவ்விதம் எனில் நாம் இன்னானுடன இன்ன ரூபத்தில் பேச வேண்டுமென்று சிந்தித்தவுடன நம்முடைய இருதயத்திலிருந்து ஜீவ காந்த ஒளியின் அலைகள் எழும்பி ஆகாயத்தில் மோதுகின்றன. ஆகாயத்தில் இருக்கிற ஜீவ காந்த ஒளியின் அலைகளானவை, அவன் சரீரத்தில் இருக்கிற ஜீவ காந்த ஒளியில் மோதி அலைகளை உண்டாக்கி, நாம் சிந்தித்த ரூபங்களை அவனுக்கு வெளியாக்கிக் காட்டுகின்றன. இவ்விதமாக ஒரு சேனையை அனுப்பி ஆயுதங்களைக் கொண்டும் அவனுடன் யுத்தம் செய்ய வைக்கலாம். இவைகளை நாமும் பரிசோதித்திருக்கிறோம். இன்னும் எதிரிகளிடமும் அனுப்பி ஒரு கோட்டையைப் போல், அவர்களை வளைத்துக் கொள்ளவாவது, ஒரு மலையைப் போல் அல்லது, ஒரு சுவரைப் போல் எழுப்பி அவர்களைத் தடுத்துக் கொள்ளவாவது செய்யலாம். அதிக வலுவான சித்தமுடையவர்கள், அல்லது இந்த வித்தையில் அப்பியாசமுடைமயவர்கள், தூக்கத்திலிருப்பவர்களிடத்தில் மட்டுமல்ல, விழித்திருப்பவர்கள் பேரிலும் இவ்விதக் காட்சிகளைக் காட்டலாம். இன்னும் மந்திரம் ஜெபிப்பவர்களிடத்திலும், யோகத்தில் இருப்பவர்களிடத்திலும், தபத்தில்

இருப்பவர்களிடத்திலும் போல் பல்லை இளித்து, முகத்தை வலித்து, பயங்கரமான பல ரூபங்களைக் காட்டி பயமுறுத்கிறதும், நல்ல ரூபங்களாகவும், நல்ல பானங்களாகவும், நல்ல வாசனைகளாகவும் வெளியாகி அவர்களை பரவசப்படுத்துகிறதும், இந்த ஒளியே. இந்த ஒளியானது தபத்திலிருப்பவர் களுக்கும், யோகத்திலிருப்பவர்களுக்கும், நல்ல ரூபத்திலாவது, கெட்ட ரூபத்திலாவது வெளியாகி தன் பொருத்தம் அல்லது, கடவுளின் பொருத்தத்தை அறிவிக்கும். இந்த ஒளியே அவர்களுக்கு நல்ல காரியங்களையும், நல்ல ரூபங்களையும் காட்டுமானால் இதை மலக்கானியா அல்லது ரஹ்மானியா அதாவது தேவ தூதர் அல்லது கடவுளைச் சேர்ந்த குணம் என்றும் இந்த ஒளி அவர்களுக்குக் கெட்ட காரியங்களையும், கெட்ட ரூபங்களையும் காட்டுமானால், அதனை ஷைத்தானியா அதாவது பிசாசின் குணத்தைச் சேர்ந்தது என்றும் சொல்லப்படும். இன்னும், இது நமக்கு, நமது சித்தத்திற்கு வழிப்பட்டதாகவும், பரலோகம், ஆன்ம லோகத்தின் உண்மைகளை நமக்கு அறிவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. நமது மன எழுச்சிக்கு தக்க ரூபங்களைக் காட்டுவதே இதன் சுபாவம். தனித்திருப்பவர்களின் எண்ணத்தில் இது பலவகை ரூவங்களை வெளியாக்குகிறது. எண்ணத்தை விட்டும் இது நீங்கின வஸ்தல்ல. எண்ணத்தையும் இதையும் பிரிக்க முடியாது. இந்த ஒளி அறிவாகவும், அந்த எண்ணம் பார்வையாகவும் இருக்கிறது. இதோடு இச்சையும் சம்பந்தப்பட்டி ருக்கிறது. இந்த இச்சையில் தொனியும் இருக்கிறது. இவ்விடத்தில் இது விவரிக்கத் தக்கதல்ல.

*(பிரகாசம் பரவும்)*

## முக்கிய அறிவிப்பு.

அன்புள்ள வாசகர்களே! நன்கொடையாளர்களே!

மதுரஸா நன்கொடை அனுப்புவோர் கீழ்க்காணும் வங்கிக்கணக்கில் பணம் செலுத்தி 9941057785 என்ற எண்ணில் ஜனாப்.எஸ்.ஐ. தவ்லத் ஹக்கிய்யுல் காதிரி அவர்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**AWNIYYA WORLD PEACE TRUST. Canara Bank, Chennai Broad way Branch C.A.No. 1374201555699 IFS Coade CNRB 0001374**

சபை உள்ள ஊர்களில் செயலாளர்களிடம் செலுத்தும் போது அதன் விபரம் மறைஞானப்பேழையில் வெளியிடப்படுகிறது. சபை இல்லாத ஊர்களிலிருந்தோ, மதுரஸாவுக்கு நேரடியாகவோ, மணியார்டர் மூலமாக பணம் அனுப்பினாலோ 9944576165 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு விபரங்களை அனுப்பினால் மறைஞானப்பேழையில் வெளியிடலாம்.

*–மதுரஸா நிர்வாகம் –*



# மதுரஸா நன்கொடை



**சென்னை**

அப்துல் ரஹ்மான் , உடல் ஆரோக்கியம பெற வேண்டி துஆ செய்ய ரூ. 2,000 /- ம்,

முஹம்மது சுல்தன் ரஷீது அல் முஸ்லம் ஜகாத் ரூ. 2,000 /-ம்,

நூரா அஹமது அல் அம்ரி ஜகாத் ரூ. 2,000 / -ம்,

என். முஹம்மது ஹாருன் உண்டியல் சேமிப்பு ரூ. 3,701 /-ம்,

அஹமது ஜலாலுதீன், உண்டியல் சேமிப்பு ரூ. 14,170 /-ம்,

அப்துல் வஹாப், உண்டியல் சேமிப்பு ரூ. 25,166 /-ம்,

பீர் முஹம்மது பேமிலி, குடும்பத்தாரின் உடல் ஆரோக்கியத் திற்கும், வியாபார அபிவிருத்திக்கும் பிரியாணி உணவுக்காக ரூ. 15,000 / -ம்,

நாதிக் பஹிமா, நிய்யத் நிறைவேற வேண்ட ரூ. 1,000 /-ம்,

ஃபாஹிம் முஹைதீன் லைலா நிய்யத் நிறைவேற வேண்டி ரூ. 8,000/-ம்,

சையது அபுதாஹிர், பூரண உடல் நல சுகம் வேண்டி ரூ. 1,000/-ம்,

ஆபிதா சுல்தானா, பூரண உடல் நல சுகம் பெற வேண்டி ரூ. 2,000/-ம்,

பெரியமெட், பீர் முஹம்மது பேமிலி குடும்ப ஆரோக்கியத்திற்கும், வியாபார அபிவிருத்திக்கும் வேண்டி ரூ. 25,000/-ம்,

எமனேஸ்வரம் சிராஜ்தீன் மனைவி உடல் நலம் சரியாக வேண்டி துஆ செய்ய ரூ. 3,000/-ம்,

அபிதா சுல்தானா, பூரண உடல் பூரண குணமடைய வேண்டி ரூ. 10,000 /-ம்,

முஹம்மது இஸ்மாயில் நிய்யத் நிறைவேற வேண்டி ரூ. 2,000/-ம்,

ஷா முஸ்தாக் அஹமது, உண்டியல் சேமிப்பு ரூ. 3,330 /-ம்,

உடுமலைப்பேட்டை அப்ரா பானு ஹாஜத்துக்கள் நிறைவேற வேண்டி துஆ செய்ய ரூ. 5,000 / - ம்,

வழங்கியுள்ளனர். வழங்கிய நல்லுள்ளங்களுக்கு நன்றி.
வஸ்ஸலாம்.

# ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் வெளியீடுகள்

குர்ஆன் விளக்கவுரை - புஹாரி ஷரஹ் - காமூஸ் (அறபி - தமிழ் அகராதி)
மௌலிது நூல்கள் (தமிழ்ப் பாக்களுடன் கூடிய மொழி பெயர்ப்பு)
தமிழ் மற்றும் இஸ்லாமிய இலக்கிய நூல்கள்
தஸவ்வுஃப் நூல்கள் (மெய்ஞ்ஞான நூல்கள்) - கொள்கை விளக்க நூல்கள்



## சங்கைக்குரிய நூலாசிரியர்கள்



அஷ்ஷெய்கு. இமாம்.
ஜமாலிய்யா அஸ்ஸெய்யித்
யாசீன் மௌலானா
அல் காதிரிய்யுல் ஹஸனிய்யுல்
ஹுஸைனிய்யுல் அல்
ஹாஷிமிய் அவர்கள்



அஷ்ஷெய்கு. இமாம்.
ஜமாலிய்யா அஸ்ஸெய்யித்
கலீல் அவ்ன்
அல் காதிரிய்யுல் ஹஸனிய்யுல்
ஹுஸைனிய்யுல் அல்
ஹாஷிமிய் அவர்கள்

தொடர்பு கொள்க

https://emsmedia.net

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul











Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee